ரிஜிஸ்டர் நெ. 2041.

தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 | |
| 6-மாத சந்தா | ,, | — ,, | 1--12 |
| வெளி நாட்டிற்கு | ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹூ வைகாசி-மீ 9-உ (22—5—1932) | மலர் 4.

## பலமுள்ளவீரபுருடனாக

குமரனாக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன மொத்துவாழ, இல்லற இன்பம் அனுபவிக்க, புத்திர பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

**தங்கபஸ்பம்.**

சாப்பிடுங்கள்.

அபாரதாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ. 10.

## மாதர்களுக்கு

இதுதான்வேண்டியது

**கெர்ப்ப எண்ணெய்**



மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும் மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி S. I.

தாது புஷ்டிக்கு

## "கெய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனமாக அனுப்புகிறோம். விலாசம்:

ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

## ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)




பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.




## புதுவைமுரசு

ஆசிரியர்:-
அ. பொன்னம்பலனார்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச் செந்தமிழ் வாரப் பத்திரிகை. வருட சந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5. மாதிரிபிரதி இனம்!

மானேஜர்,
"புதுவை முரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதா பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. பகுத்தறிவேவிடுதலே அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) 0—6—0
5. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
6. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
7. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0
8. மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு.



## Read.
## The 'Citizen'
and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.



## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "போர் முரசு"

வாரப்பதிப்பு.
ஆசிரியர் ச. ம. சி- பரமசிவம்
தனிப்பிரதி காலணு.
வருட சந்தா ரூ. 1—8—0.
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர்—திருச்சி.



## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினுல் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.





## கோஷாயி இரவுமாத்திரை.

மலபந்த நிவாரணி-மலபந்தத்தினுல் ஏற்பட்ட அன்னதுவேஷம், அசதி, இடுப்புவலி, மார்நோய், வாய்வு உபத்திரவங்கள், கீல்வாய்வு, பிடிப்புகள், சூலை, தாதுநஷ்டம் முதலிய வியாதிகளுக்கு இரவு போஜனம் செய்த அரைமணி நேரத்திற்குப்பின் ஒரு வெற்றிலையில் கோஷாயி இரவு மாத்திரை ஒன்று மடித்து மென்று ஜலம் சாப்பிட்டால் வாய்வுகள் கலைந்து அதிகாலையில் மலம் தாராளமாய் கழிக்கும். வெட்டைவாய்வு உபாதைகள் படிப்படியாய் குறைந்து குணம் தரக்கூடியது. (சர்க்கூட்) தேசசஞ்சாரம் செய்துவரும் உத்தியோகஸ்தர்கள் வியாபாரிகள் இவர்களின் சௌகரியங்களை உத்தேசித்தே தயாரித்திருப்பதினுல் எவ்விதபத்தியமுமில்லை. கோஷாயி இரவு மாத்திரை 51-கொண்ட சீசா 1-க்கு ரூ. 1—10—0. 101 மாத்திரை கொண்ட சீசா 1-க்கு ரூ. 3—0—0. பாக்கிங்தபால் செலவு வேறு மலாய்வாசிகள் ஆர்டருடன் ரூபாய் ஒன்று சேர்த்து முன்பணம்அனுப்பி வைக்கவும். எல்லா ஊர்களிலும் கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டாக்டர் B. S. எதிராஜ் (கால்ராபைரி)
கோஷாயி வைத்தியசாலை தென்னூர், திருச்சி.
உதவி டாக்டர்:— T. K. V. Chalam,



LEPROSY, LEUCODERMA PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.



### "சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.
ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
,, வெளிநாடு 1—8—0.
மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.



பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனுர் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது
# பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

# Mummified Bodies of Saint How preserved.

# சாமிகளின் மரித்த சரீரம் பதப்படுத்தும் விதம்.

## நோவாவில் அர்ச். செவேரியார் தேகக்காட்சி.

### நந்தம்பாக்கம் நிருபருக்கு விடை.

[தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.,]

செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த நந்தம்பாக்கம் கிராமத்திலிருந்து ஒரு நிருபர், கோவாபட்டணத்தில், அர்ச்செவேரியார் எனும் சாமியாரின் பிரேதம், 400 வருஷமாயும் நாற்றம், இளைப்பு யாதொன்றுமின்றி தூங்கும் பாவனையாகவே வைக்கப்பட்டிருக்கிறதாகவும்; அதனைப்போய் பார்த்து வந்தவர்கள், அது கடவுளின் மகத்துவமென்று சொல்வதாகவும்; ஆனால் நமது நிருபர் ரசாயன முறைகளால், அத்தேகம் காப்பாற்றப்பட்டிருக்கலாமென்று தான் சொன்னதாகவும்; அதற்கு அவர்கள், ரசாயன முறைகள் அந்தக்காலத்தில் யாருக்கும் தெரியாததாகையால் அது கடவுள் சக்தியால் இருக்குமென்று சொல்லுகிறபடியால், அவ்விதம் காப்பாற்றப்பட்ட (Preserved) தேகம் கெடாமல் இருப்பதற்குத் தகுந்த சமாதானம் கொடுக்கும்படி நம்மைக் கேட்டுக்கொண்டு அந்த விடையை "குடி அரசில்" பிரசுரிக்கும்படியும் கோருகின்றார்.

மரித்துப் போன தேகம், பதப்படுத்தப்பட்டால், அதனை மம்மி (Mummy) என்று வழங்குவார்கள். "மம்மி" என்றால், வாசனை கட்டி வைத்த சவம் (a dead human body embalmed) என்றும், சிதையாமல் பாகம் பண்ணப்பட்ட சவம், அல்லது தைலமாட்டிய பிரேதம் (a dead human body, embalmed after the manner of ancient Egyptians with wax, balsams etc) என்று தமிழ் அகராதிகளில் அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தப்படி, நமது நிருபர், கிறிஸ்துவ பக்தர்களுக்கு கொடுத்த விடை சரியாகவேயிருக்கிறது. மெழுக்கு வாசனை முதலிய ரசாயனப் பொருள்களால், இறந்த தேகம் இன்றைக்கும் அழிவுறாமல் காக்கப்படலாம். இவ்வித ரசாயனப் பொருள்களைக்கொண்டே, 5000 வருஷங்களுக்கு முந்தியே ஈஜிப்ட் வாசிகள், தங்களில் மரித்தோர் உடல்களை, பதம், செய்து வைத்து வந்தனர். சிற்சில வீட்டுப் பிராணிகளையும் (domestic animals) பதம் செய்து வைத்தும் வந்தனர். பிரமிடஸ் (Pyramids) என்று வழங்கும் மாபெருங் கோபுரங்களும், இவ்விதமாக பதம் செய்த சவங்களின் மேல் கட்டிய கட்டடங்களாகும். இறந்த அரசர், அரசிகளின்உடலைப்பதம் செய்து, அதனை அடக்கம் பண்ணி அதன் மேல் பெரும் சமாதி கட்டடங்களை கட்டுவித்தனர். அவர்களுடன், அவர்கள் அன்புடன் வளர்த்த பூனையையும், பதம் செய்து அடக்கம் செய்துள்ளார். 5000 வருஷத்திற்கு முந்தி,ஈஜிப்ட்டை அரசாண்ட ராணி உடனுடன்,பச்சைக்கிளியையும் பதம் செய்து வைத்துள்ளார். இவை மாதிரியான ஈஜிப்ட் தேசத்திய சமாதிகளைத் தோண்டி எடுத்து, சீமையில் காட்சிசாலையில் (British Museums) வைத்துமிருக்கின்றனர். சென்ற 20 வருஷமாகத் தோண்டிஎடுக்கப்பட்ட "தூடன் காமன்" என்ற பேர்போன ஈஜிப்ட் அரசனுடைய திரேகத்தை இன்றைக்கும் பார்க்கலாம். இந்த உடலின்காலம், 5000வருஷத்திற்குக்குறையாமல் இருக்கும். ஆதலால், 400 வருஷங்களுக்குமுந்தி இறந்த அர்ச்பெரியாரின் பிரேதம், பதம் செய்யப்பட்டு, கெடாமல் இருந்து வருவது ஆச்சரியமல்ல! உலகப் பிரசித்தம் பெற்ற நாஸ்திகவாதியான (கடவுள் இல்லையென்பார்) லெனின் (Lenin) தேகத்தை பதப்படுத்தி, கண்காட்சிக்காக, கெரம்லின் (Kremlin) கட்டிடத்தில் மாஸ்கோவில் (Moscow) வைக்கப்பட்டுள்ளதென்றால்,செத்துப்போனதேகத்தை கெடாமல் வைப்பதற்கு, கடவுள் அருள் ஏன்வேண்டும்? 5000 வருஷங்களுக்கு முந்தி, பூனை, நாய், கிளிப்பிள்ளை முதலிய அற்ப பிராணிகளைப்பதப்படுத்தி வைத்த பயனாக, இன்றைக்கும் அவைகளின் உடல்களை யாதொரு கெடுதியுமின்றி, கண்காட்சிசாலைகளில் எடுத்து வைத்திருப்பதென்றால், அர்ச். சவெரியாருடையமரித்துப்போனஉடல் கெடுதியில்லாமல்இருப்பதற்குகடவுள் அருளோ, அல்லதுமகத்துவமோ அல்லது அபூர்வமோ, என் வேண்டும்? 400 வருஷங்களுக்கு முந்தி இறந்த தேகம் அழியாமல் இருப்பதற்கு கடவுளின் மகத்துவம் வேண்டுமென்றால், 5000 வருஷங்களுக்கு முன் இறந்த நாய், பூனை கிளிகளின் தேகம் அழிவுறாமல் இருப்பதற்கு கடவுளின் அற்புதம் வேண்டாமா? நாய் தேகத்தையும், பூனை உடலையும், இறந்த பிறகு அழியாமல் வைப்பதற்குக் கடவுள்மகத்துவம் வேண்டுமென்று யாராகிலும் சொன்னால், நகைப்புக்கிடமாகும்! அர்ச். சாவேரியார் திரேகத்தை கெடாமல் வைத்திருக்கும் மகிமை, கடவுளால் என்றால், என் நகைப்புக்கிடமிராது? இவ்வித சமாதானம் கொடுத்தால், சிறு பிள்ளைகளும் நகைப்பர்! இவ்வித சமாதானங்கள்(Explanations) மூட பக்தியால் கொடுக்கும் சமாதானங்களே யொழிய, விசாரணையால் அல்ல. இன்றைய தினமே கோவாவில் அடக்கம் செய்துள்ள அர்ச்சாவேரியார்உடலையாகிலும், அல்லது ரோமில் அடக்கம் செய்துள்ள செயிண்ட் பீட்டர் (St. Peter) உடலையாகிலும், ரசாயன சாஸ்திரிகளைக்கொண்டு, பரிட்சை செய்தால், பிரக்கியாதி பெற்றுள்ள இந்த இரண்டு தேகங்களும், பதப்படுத்தப்பட்டிருப்பது நிரூபிக்கப்படும். மூட நம்பிக்கைகளால் விளையும் கேடுகளுக்கு அளவேயில்லை என்று பல தடவையும் எடுத்துக்காட்டியுள்ளோம். மூட பக்தியை நீக்குவது அரசாங்கத்தின் முதற்கடமையாகும். போர்த்துகல் (Portugal) அரசும், இடலி (Italy) அரசும், தங்கள் குடிகளின் மூடபக்தியைப்போக்க கடமைப்பட்டுள்ளார். மூட பக்தியால் விளையும் கேடுகளுக்கும், துர்மார்க்கத்தனத்தால் விளையும் கேடுகளுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை என அறிதல் வேண்டும். ஒன்றைமாத்திரம் சட்டதிட்டங்களால் நிறுத்தி, மற்றொன்றை விட்டுவிடுவதென்றால்,அதைப்போன்ற மதியீனம் ஒன்றுமில்லை. மேலிரண்டு பெரியார்களின் மரித்த உடல்களைப் பொதுவாகப்பரிசோதனை செய்யவிட்டு, அந்த தேகங்கள் பதப்படுத்தப்பட்டிருப்பதை யாவரும் அறியக்காட்டி மூட மக்களின் அறியாமையை ஏன் போக்கலாதென்று கேட்கின்றோம்?

மக்கள் அறியாமையால் விளையும் வினைகளை நன்குணர்ந்த ரஷ்ய தேசத்து சோவியட் (Soviet) அரசு, இந்த மாதிரியான காட்சி விஷயங்களில் என்ன செய்கின்றதென்று விசாரிப்போம்.

ரஷ்ய தேசத்தில் சக்ரவர்த்தி ஆளுகையில், ரஷ்ய மக்களின் அறியாமைமிகுந்திருந்தது. எவ்வளவோ மூடநம்பிக்கையில் மூழ்கிக்கிடந்தனர்! ஆனால். நமது நாட்டின் அறியாமையும், மூட பக்தியும் எவ்வுலகிலும் காண்பதரிது. இந்த விஷயத்தில் நமது நாட்டைத்தோல்விக்கும் நாடு உலகில் எங்குமில்லை என்று சொல்லலாம். இது நிற்க, ரஷ்ய தேசத்தில், சந்து பொந்துகளுக்கு ஒரு மாதா கோவில் இருக்கும். அந்த மாதா கோயில்களில் இறந்த சாமிகளின் (Saints) பிரேதங்களை பக்குவப்படுத்தப்பட்டு வைத்திருக்கும். அந்த பிரேதங்கள், கடவுள் மகிமையால் கெடாமலிருப்பதாக, பல கோடி ரஷ்ய மக்கள், நம்பி வந்தனர். நாஸ்திக ரஷ்யா வந்த பிறகு, இந்த பிரசண்ட மூட பக்தியை (Collossal Ignorance) நீக்க வேண்டி, சில பரிட்சைகள் செய்து காட்டுகின்றனர். அந்த சாமிகள் பிரேத உடல்களுக்குப் பக்கத்தில், கொலையாளியின் பிரேத உடலையும், திருடனுடைய பிரேத உடலையும் கொள்ளைக்காரன் பிரேதவுடலையும் அடுத்தாற்போல் வைத்து, இவைகளும் கெடாமல் நாற்றமின்றி இருப்பதைக் காட்டுகின்றார்கள். சாமி உடலும், திருடன் உடலும் கெடாமலிருப்பதைக்கண்ட மூட பக்தர்கள், தெளிவு பெற்று, புனிதர்களாய் தத்தம் நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள மூடபக்தர்களுக்கும் தெளிவை உண்டாக்குகின்றார்கள். இதுவன்றோ அரசியல் நீதி!

நாயுடலையும், நரியுடலையும்,திருடர் உடலையும், மகாத்மா (Saints) உடலையும் கெடாமல்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

# சேலம் ஜில்லா சுயமரியாதைப் பெண்கள் மகாநாடு.

## திறப்பாளர் திருமதி ஆர். அன்னபூரணி அவர்கள் சொற்பொழிவு.

அகில மெல்லாம் சுதந்திர உணர்ச்சி தோன்றி ஜன நாயகம், சமத்துவம், பொது வுடமை, விஞ்ஞானம் என்னும் பல பெயர்களோடு சங்க நாதமிட்டு வரும் முழக்கத்தைக் கேட்டு மதங்களும், குருக்களும், இருந்தவிடந் தெரியாமல் ஒடி ஒளித்துக் கொண்டிருக்கும் இந்நாளில் சுயமரியாதை இயக்கம் நமது நாட்டில் தோன்றி மாதர் அடிமையையும், தீண்டாமையையும் போக்கிச் சமதர்மத்தை நிலை நாட்ட வேண்டுமென்று இயங்கி வருவதில் ஆச்சரியப் படத்தக்கதென்னவிருக்கின்றது?

கிரேக்கர், ரோமர் முதலியோருடைய தொன்மை நாகரீகங்களெல்லாம் இருந்த விடந் தெரியாதொழிந்ததற்குக் காரணமென்ன? அவ்வக் கால மனித சமூகத்தின் முன்னேற்றத்தைப் பின்பற்றிச் செல்லாமையாலன்றோ? ஆதலின் மனித வர்க்கத்தின் நாகரீகத்தையும், முன்னேற்றத்தையும் பின்பற்றிச் செல்லாமல் எதிர்த்து நிற்கும் கொள்கைகள் வைதீகமாயினும் சரி, ஐதீகமாயினும்சரி அவைகள் இருந்த விடந் தெரியாமல் ஒழிய வேண்டியதென்பது உண்மையன்றோ? பாரதக் கதையில் கூறப்படும் வில் வீரர்களாகிய விஜயனும், வீமனுமே திரும்பி வந்து வில்லையும், கதையையும் எடுத்துக் கொண்டு ஆண்ட்வர்ப் கோட்டையை நிர்த்தூளியாக்கிய ஜெர்மன் பீரங்கி முன் போவார்களானால் அவர்கள் கதி என்னாகுமென்று கேட்கிறேன். எந்தக் காங்கிரசாவது வைதீகராவது அக்காலத்து வில்லும் வாளும் புனிதமானதென்று கூறி, இக்கால யுத்தக் கருவிகளாக மேற்கொள்ள முன் வருவார்களா? இல்லையெனின், என் முன்னோர் வழக்கத்தைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்கின்றேன்?

காலச் சக்கரத்தின் துணை நலத்தால் விசாலப்படும் அறிவின் உணர்ச்சிக் கேற்ற இயக்கமே மனித வர்க்கத்தை மகிழ்விக்கக் கூடியதே தவிர பழமை யென்பதும், மதக் கொள்கை யென்பதும் சிறிதும் பொருந்தாவன வல்லவாம். நீலகிரியில் போர்த்துக் கொள்ளும் கம்பளம், கடப்பையில் போர்த்துக் கொள்ள உதவாதது போல, காட்டு மிராண்டித் தனமான காலத்தும், அநாகரீக நிலைமையிலும் அநுசரித்த கொள்கையும், செயலுமாகிய வேத ஸ்மிருதியின் விதிகள், விஞ்ஞான உலகமாகிய இவ்விருபதாம் நூற்றாண்டுக் குதவாதென்பதை நமது வைதிக நண்பர்கள் உணரவேண்டும்.

இந்து மதத்தின் வேத சாஸ்திரங்களெல்லாம் ஒரே காலத்தில் ஒரே இடத்தில் உண்டானவைகளல்ல. பண்டைய ஆரியரது பல்லாயிர வருட சரித்திர வரலாறுகளே அவை கால வேற்றுமைக் கேற்க அப்போதைக் கப்போது விதிக்கப் பட்டனவும், ஒன்றுக் கொன்று சிறிதும் பொருந்தாதனவுமான அபிப்பிராயங்களே அவற்றுள் நிரம்பிக் கிடக்கின்றன. நமது தற்கால அறிவியக்கத்திற்குச் சிறிதும் பொருந்தாதனவும், அருவருக்கத் தக்கனவுமானப் பல கொள்கைகள் அவற்றிற் காணலாம். உதாரணமாக ரிஷி சிரேஷ்டர்கள் முதலாக யாவருமே அக்காலத்தில் பசு மாமிசம் உள்பட பலவித ஊன்களைத் தின்று சோமரசம் போன்ற மதுக்களையும் குடித்து வந்தனர். பசு மாமிசத்தை ஆசாரியர்களான பிராமணோத்தமர்கள் தின்னலாமா வென்ற ஆசங்கை எழுந்த போது மகருஷி யாக்ஞ வல்கியர், சரியோ தப்போ பசுமாமிசம் மிருதுவாக இருந்தால் யான் தின்பதுண்டு என்றாராம். பசு மாமிசம் உண்போரை இந்துக்களில் சேர்க்க முடியாதென்று கூறும் எந்த ஆச்சாரியராவது மிருதுவான பசு மாமிசத்தைத் தின்ன முன்வருவாரா வென்று கேட்கிறேன்?

ஒரு பெண் பல புருஷருக்கு மனைவியாக இருக்கும் வழக்கத்தையும் ராக்ஷசம் உள்பட 8 விதமான கல்யாணங்களையும் 12 விதமானப் புத்திரப் பேற்றையும். வர்ண பேத வியபசாரங்களையும், நரபலி சிசு வதை, ஸதி, முதலிய கொடிய ஆசாரங்களையும் இன்னும் இவை போன்ற பல ஒழுங்கீனங்களையும் ஆரிய ஸ்மிருதிகளிற் காணலாம் அவைகளையெல்லாம் திரும்பவும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று எந்த ஆச்சாரியாராவது, ஐயர் ஐயங்கார்களாவது கூறுவார்களா? இவைகளின் நிலைமை இங்ஙனமிருக்க, இவைகளைப் புனிதமானதென்று மதித்துப் பெருமை படுத்த வேண்டுமென்று எவராவது எதிர் பார்ப்பார்களானால், அவர்கள் ஏமாற்றமடைவார்களே தவிர பலனடைய மாட்டார்களென்பது உண்மை.

1911-ம் வருட ஜனக்கணித அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஒரு விஷயத்தை யுங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன். "தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொருவனுடைய பேராவலெல்லாம் தன்னையோர் பிராமணனாக, அல்லது பிராமணனைப் போவிருப்பவனைப் பிறர் மதிக்கவேண்டுமென்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள் எனக்குறிக்கப் பட்டிருக்கிறது. இதனின்று அறியக் கிடப்பதென்ன வென்றால், பார்ப்பனரல்லாதாராகிய நாமெல்லோரும் புரோகிதச் சடங்காச்சாரங்களுக்கு அளவில்லா மதிப்பைக் கொடுத்து அவைகளுக்கு அடிமைகளாக வாழ்ந்து வந்தமையால், பார்ப்பனர்கள் தங்கள் பெருமைக்கு நமது மூட பக்தியைக் கருவியாகக் கொண்டு செல்வாக்கடைந்து வந்தார்களென்பது நன்கு விளங்கவில்லையா?

இம்மட்டோ? மூவாயிரம் ஆண்டுகளாகப் பிராமணரே இந்நாடெல்லாம் மேலளாவி முன்னிருந்தார் இடையே வந்தார் முதலிய எல்லோருடைய நாகரீகங்களையும் தங்கள் பார்ப்பனீயத்திற்குட்படுத்தியும், மாற்றியும் தாமே பூதேவரென்றும், தமது சாதியே ஒப்புயர்வற்றதென்றும், மற்றெல்லோரும் தமக்குப் படிப்படியாகக் கீழ்ப்பட்டுத் தமக்காகவே உழைக்க வேண்டுமென்றும் நிலை நாட்டியதுமன்றிப் பிறரையும் ஒருவாறு நம்பி அப்படியே ஒழுகும்படிச் செய்திருக்கிறார்கள். ஆகையால் கால மென்னும் பேராற்று வெள்ளத்தில் பகுத்தறி வென்னும் தோணியின் துணையைக் கொண்டு சுதந்தரமென்னும் பட்டணத்தை நோக்கி மேனாட்டாரெல்லாம் உல்லாசமாக ஓடிக் கொண்டிருக்கையில் நாமோ வைதீகம் பழமை யென்னும் பார்ப்பன விலங்கில் சிக்குண்டு மூழ்கி, மூழ்கித் தள்ளாடித் தவிக்கின்றோமென்பதை யாராவது மறுக்கக்கூடுமா?

வேண்டாதனவும், விலக்கக் கூடியனவும், தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்டனவுமான பல்வேறு சுயக் காரிய அநர்த்தங்களால் இந்துக்கள் கஷ்டப்படுவது போல இப்பேருலகில் வேறு யாருமே கஷ்டப் படவில்லை என்று மகா மேதாவியாய் விளங்கின ராஜா சர். டி. மாதவராவ் கூறியுள்ளது உண்மையல்லவா? ஆதலின் இப்போது நமக்குள் நடைபெறும் மதக்கோடல், பழக்க வழக்கங்கள் முதலியன வெல்லாம்பரமாத்மா, ஜீவாத்மா வென்னும் பூச்சாண்டிகள் மேல் கட்டப்பட்டு நமது முன்னேற்றத்திற்குத் தடை கற்களாய் இருந்து வருகின்றமையால் அவைகளை அடியோடு பெயர்த் தெறிந்து பகுத்தறிவைத் துணைபற்றி முன்னேற வேண்டியதே அவசிய மென்று ஸ்தாபிக்கபபட்டது.

இனி அதற்கு எம்முறைகளைக் கைக் கொள்ளல் வேண்டு மென்பது பற்றி விசாரிப்போம். பொதுவாக மதங்களின் கட்டுப்பாடுகள் ஜன சமூகத்தின் முன்னேற்றத்திற்குப் பெருந்தடைகளாயிருந்து வருகின்றமையால். அம்மதங்களின் மயக்கம் மனித சமூகத்தின் சிந்தையை விட்டு விலக வேண்டியது அவசியமாயினும் சிறப்பாக நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு மகளிர் சமத்துவமும், ஜாதி பேத விலக்கும் விரைந்துண்டாக வேண்டுமென்று யான் கேட்டுக் கொள்ளுகிறேன். சமூக சீர்திருத்தத்தினாலோ, அல்லது அரசியல் சட்டங்களினாலோ வல்லாமல் மதக் கொள்கைகளைப் பின்பற்றும் வரை மாதர் முன்னேற்றத்திற்குச் சிறிதும் மார்க்கமேயில்லை யென்பது திண்ணமாம். ஒரு மதம் மாதர்களுக்கு ஆத்மாவில்லை யென்றுகூறும், இன்னொரு மதம் பெண்கள் பாப ஜென்மங்கள் என்று கூறும், வேறொரு மதம் ஆண்களுக்கு அடிமைகளாயிருக்கவே பெண்கள் சிருஷ்டிக்கப் பட்டார்களென்று கூறும். இம்மதங்களெல்லாம் இடியுண்ட நாகம்போல் எற்றுண்டு நசுங்கும் வண்ணம் நமது சத்தன்ம இயக்கம் தோன்றி மாதர்களுக்கு ஆத்மா இல்லை யென்னும் பேதையரே மனிதருக்குள் ஆத்மா எங்கிருக்கிறது என்று கேட்கிறது? பெண்கள் பாப ஜென்மங்கள் என்னும் பாபிகளே! ஜென்மம் எடுக்கும் ஜந்துவுக்கு எத்தனைக் கால்கள் என்று கேட்கிறது? பெண்கள் ஆண்களுக்கு அடிமை யென்ற வீணரே ஆண்கள் அடிமையுண்டு உழல்வதற்குக் காரணமென்ன வென்று கேட்கிறது? பெண்கள் ஆண்களுக்கு அடிமையானால் அடிமைகளை வாழ்க்கைத் துணையாகக் கொள்ளும் ஆண்கள் அறிவுடையோராவாரா?

இந்திய ஜனத் தொகையில் அரை பாகங் கொண்டவர்களும், சமூக வாழ்க்கையிலும், மக்கள் பேற்றிலும் சதா ஈடுபட்டுழைப் போருமாகிய பெண்மக்களை அடிமைகளாகவும், பேதைகளாகவும் கருதி இம்சித்து வரும் நாடு எங்ஙனம் முன்னேற்றமடையக் கூடும்? பெண்களைச் சமத்துவமாக நடத்தியதின் பேருதவியை மகா யுத்தம் நிரூபித்துக் காட்டியதை இங்கு ஞாபகப் படுத்துகிறேன். போர்த்திறம் செறிந்த ஜெர்மனியரின் சேனா வெள்ளம் ஐரோப்பிய நாகரீகத்தையே சிதைத்து தமது ஆயுத பலத்தை நிலைநாட்ட முயற்சித்தமை உலகமறிந்த தொன்றாம். பிரெஞ்சு தேசத்திலுள்ள ஆண் மக்களும், இங்கிலாந்தின் இளைஞர்களும் அமர்க்களம்புக்கு ஜெர்மனிய சேனா வெள்ளத்தைக் கடுமையாய்த் தடுத்துக் கொண்டிருந்தமையால் உள்நாட்டுத் தொழில்களாகும் ரயில்வே, தபால், தந்தி, சுகாதாரம், வைத்தியம், கைத்தொழில் முதலியன வெல்லாம் கவனிப்பாரற்று நசிந்து போகும் நிலைமையிலிருந்ததை யுணர்ந்த அந்நாட்டுப் பெண் மணிகள் அவ்வேலைகளை யெல்லாம் சரிவர நடத்தி அவர்கள் நாட்டின் பெருமையையும், பொருளாதாரத்தையும் காப்பாற்றினார்கள். அப்பெண்களுக்குச் சமத்துவ உரிமை கொடுத்தால் அந்நாட்டுக்கு ஏற்பட்ட பேருதவியை நாகரீக உலகம் மறக்கக் கூடுமா? இவ்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

# பெண் மக்கள் அடிமை.

[தோழர் டி. கே. எம். சாமி]

நம் நாட்டின் ஜன தொகையின் இரண்டிலொரு பாகமாகி இரண்டறக்கலந்து நிற்கும் நம் பெண் சமூகத்தின் தற்கால நிலைமையை நோக்கின் எந்த வீரமுள்ள ஆண் மகனும் கண்ணீர் விடாமலிருக்க முடியாது.

நம் நாட்டுப் பெண்மக்களை—நம்மை யீன்ற தாய்மார்களை—நம்முடன் பிறந்த சகோதரிகளை கொடுமைப் படுத்தி அவர்களுக்குப் போதிய கல்வியளிக்காது அவர்களுள்ளத்துள்ளே யிருக்கும் மெய்ஞ்ஞான அறிவை விளக்காது, அவர்கள் தன் மதிப்பை யுணர்த்தாது கேவலம் அடிமைகளாய் ஆடவர் மனதில் தோன்றும் காமஇச்சையைத்தணிப்பதற்கும் பிள்ளைகளைப் பெறுவதற்குமுரிய யந்திரங்களாய் நினைத்து எவ்வழியிலும் அவர்களை முன்னேற வொட்டாது தடுத்து நிற்கும் காரணங்கள் பலப்பல.

நம் நாட்டுப் பெண் மக்கள் அடிமையிலாழ்ந்து தன்மதிப் பிழந்து சுதந்திர உணர்ச்சியிழந்து வீரங்குன்றி நடைப்பிணங்களாய் துன்ப வாழ்க்கை வாழ பெருங் காரணமாயிருப்பவை நமது மதமும், மதத்தின் பிரிவுகளான சாஸ்திரங்களும் சமூகச் சட்டங்களும், ஜாதி பேதச் சட்டங்களும் பழக்க வழக்கங்களுமே யாகும். மற்ற எந்த நாட்டிலுமில்லாத ஓர் பெரும் கொடுமை நம் நாட்டுப் பெண் மக்களை பாதித்து அவர்களை என்றும் அதினின்று மீளா வண்ணம் தடைப் படுத்திக் கொண்டிருக்கிறது. அதுவே விதவைஎன்னும் ஓர் அர்த்தமற்ற நிலைமையாகும்.

நம் இந்திய நாட்டில் தோன்றிய ஓர் பெண்மணி தனது 9 வயதில் பெற்றோர்களின் பலவந்தத்தால் தன் சுதந்திர மிழந்து கலியாணமென்பது என்ன என்பதையும், தன்னை மணந்து கொள்ளும் ஆடவனுக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தம் ஏற்படப் போகிறதென்பதையும், தான் எவ்வளவு தூரம் அவனுக்குக் கடமைப் பட்டிருக்கிறாள் என்பதையும், தான் ஒரு ஆடவனை மணந்து கொள்ள வேண்டுவதன் அவசியம் என்ன என்பதையும் உணரா முன்னர் மணம் செய்விக்கப்படுகிறாள். பின்னர் தான் தக்க பருவமடைந்து ஒரு ஆடவனுடன் ஒன்றுபட்டு வாழ்வு நடாத்த அவாவுற்றிருக்கும் சமயம அவளது கணவன் இவ்வுலகை துறக்க அவள் விதவையாகிறாள். இனி அப்பெண்ணினல்லாள் கதி யென்னவது? அவளது வாழ்வு அத்துடன் முடிவடைந்துவிட வேண்டும் அவள் எக் காரணத்தைக் கொண்டும் தன்னுள்ளத்துள்ளே தோன்றும் இன்ப வுணர்ச்சியை முற்றுப் பெறச் செய்யவாவது, ஒரு மன மொத்த வாலிபனுடன் ஒன்றுபட்டு வாழ அவாக் கொண்டு துடிக்கும் மனோ உணர்ச்சியை நிறைவேற்றிக் கொள்ளவாவது, ஒழுங்கானதும் ஜனசமூகத்தால் சம்மதிக்கப் பட்டதுமான வேறு வழியில்லை. அத்துடன் அவள் வெளியில் செல்லக் கூடாது, வீட்டின் மூலையிலுள்ள ஓர் இருண்ட அறையே அவளுக்கு உலகம். அவள் மங்களகரமான காரியங்களில் கண்ணிலும் படக்கூடாது. அவள் ஆயுள் முடிய தன்னந்தனியளாய் தன்னைப் போலொத்த மங்கைகளும் வாலிபர்களும் நடாத்தும் இன்ப வாழ்வைப் பார்த்து ஏங்கி நெஞ்சங்குமுறி கண்ணீருங் கம்பலையுமாய் தனது வாளுட்களை வீணாட்களாக்கிக் காலங்கழிக்க வேண்டும். வேறு எக்காரணம் பற்றியும் ஒழுங்கான வழிகளில் அவள் கடைத்தேற முடியாது. தனது நிலையினின்றும் சிறிது தவறுவளேல் அவளுக்கென சிருட்டிக்கப் பட்டிருக்கும் தனி நரகில் விழ வேண்டும். இதுவே நமது மதச்சட்டம்.

இரண்டாவதாக நம் பெண்மக்களை கொடுமைப் படுத்திக் கொல்வது பால்ய மணமென்ற பெருங் கொடுமையாகும். தன் சின்னஞ் சிறுவயதில் பகுத்தறிவற்ற வயதில் தான் முன் பின்னறியாத ஒரு வாலிபனுக்கு மணம் செய்விக்கப் படுகிறாள். அத்தம்பதிகளின் குணமும் நடத்தையும் ஒன்று பட்டிருந்தாலொழிய அவளது வாழ்வும் பரிதாபகரமானதே? அம்மங்கையின் வாழ்வை அவ்வாலிபனுக்கும் அவனது வாழ்வை அம்மங்கைக்குமாக ஒருவர் வாழ்வை ஒருவருக்கு பலியிட்டு இருவரும் உண்மையின்ப மின்றி கடமைக்காக காலங்கழிக்கின்றனர். அவர்களிருவருக்கும் கலியாணமென்ற ஓர் அர்த்தமற்ற சடங்கு நடத்தப்பட்டு விட்டதாலேயே அவர்கள் அதினின்றும் ஒழுங்கான முறையில் தப்ப வழியின்றி மனமொத்த காதலர்களின் வாழ்வை நினைந்து பெருமூச்சு விட்டபடியே ஏங்கி காலம் கழிக்கின்றனர். இதுவே நமது மதத்தால் நம் பெண் சமூகத்திற்கு ஏற்பட்ட பெரும் நன்மைகளாகும். இன்னும் இது போன்ற பற்பல வழிகளில் கொடுமைப் படுத்தப் பட்டு கடைத்தேற மார்க்க மின்றி நடைப் பிணங்களாய் துன்ப வாழ்வுவாழ்ந்து காலங்கழிக்கும் பெண்மணிகள் எத்தனை லக்ஷம்?

நம் நாட்டில் தோன்றிய பேரறிவாளர்களும் அறிஞர்களும், மேதாவிகளும், பி. ஏ. பி. எல். களும், நம் நாட்டில் நெடு நாளாய் குடி யேறி மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான கடவுள்களும், நம் நாட்டின் விடுதலைக்காகவே உழைப்பதாகக் கூறிக் கொள்ளும் காங்கிரசும், அதன் குட்டி ஸ்தாபனங்களும், இவர்களின் விடுதலைக்காக என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள்? சின்னாட்களுக்கு முன் தோன்றிய நமது சுயமரியாதை இயக்கம் இந்த ஏழு ஆண்டுகளில் எத்தனை விதவை மக்களின் துயர் தீர்த்திருக்கிறது. எத்தனை சகோதரிகளை பால்ய மணக் கொடுமையினின்றும் மீட்டிருக்கிறதென்பதை சுயமரியாதை இயக்க விரோதிகளும் ஒப்புக் கொள்ளக் கூடிய விஷயமாகும். நாங்களே இந்தியாவின் கர்த்தாக்கள், நாங்களே இந்தியாவின் அரசியல் வாதிகள். நாங்களே ஏழை மக்களின் பிரதிநிதிகள் நாங்களே சீர்திருத்தக்காரர்கள் என மேடை மீது நின்று அறை கூவிக் கொள்ளும் தேசிய வாதிகளும், இந்தியாவின் தெய்வீகத் தன்மை இம்மிலேச்ச அரசாங்கத்தாரால் தூரத்தப்பட்டு விடாதபடி தங்களாலேயே நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது என்று பறையடித்துக் கொள்ளும் மதத் தலைவர்களும், குருட்டு வைதீகர்களும், நம் நாட்டு சகோதரிகளின் துயர் தீர்க்க முன் வராவிட்டாலும் முன் வந்திருக்கும் சகோதரர்களையாவது இழிவு படுத்திக்கூறாமலிருக்கக்கூடாதா! பிச்சை இடாவிடினும் சட்டியையேனும் உடைக்காமலிருக்கக் கூடாதா? அதுவுமில்லை, கடவுள் போச்சு, சாஸ்திரம் போச்சு மக்களெல்லாம் மிருக வாழ்வில் திரும்புகிறார்கள். இதுவே உலக பிரளய காலம் என்று போடும் கூச்சல்தானென்னே! பொதுவாக நாட்டு மக்களும் சிறப்பாக பெண்மக்களும் நம் மதங்களால், சாஸ்திரங்களால், கடவுள்களால் கொடுமைப் படுத்தப்பட்டு உய்யும் வழியின்றி பரிதவிக்கும் நிலைமை நோக்கி, எவ்வித எதிர்ப்பையும் பொருட்படுத்தாது முன் வந்து அவர்கள் துயர் தீர்த்து, சுதந்திரமடையச் செய்து கொண்டு வரும் சுயமரியாதை வீரர்களையும், இளஞ் சிங்கங்களையும், காலிகள் என்றும் தேசத்துரோகிகளென்றும், நாஸ்திகர்களென்றும் கோடரிக்காம்புகளென்றும் அறை கூவும் மண்டுகளின் மடமதியை எதற்கொப்பிடுவது? மக்களில் இரண்டறக்கலந்து காட்சியளிக்கும் நம் சகோதரிமார்களை இவ்விதக் கொடுமையினின்று மீட்ப அவர்களுக்கு சுதந்தர உணர்வை ஊட்டுவதை விட, வேறொரு முக்கியமான வேலை வேறென்றிருக்க முடியுமா? வென சீர்திருத்தக்காரர்களென்று சொல்லிக் கொள்ளும் தேசிய வாதிகளைக் கேட்கின்றோம்.

பெண்மக்களுக்கு சமத்துவம் கொடுக்க வேண்டியது அவசியந் தான்; ஆனாலும் விதவை மணம் விவாக ரத்து, முதலிய அமங்களகரமான காரியங்களைச் செய்ய முன் வந்தால் நம் நாட்டு தெய்வீகத் தன்மை யொழிந்து மிருகத் தன்மையுண்டாகிறது; கடவுளே அவர்கள் இவ்வுலக இன்பமனுபவிக்கத் தகுதியற்றவர்களென்று வெறுத்து அவர்களை விதவையாக்கி யிருக்க சுயமரியாதை இயக்கக் காரர்கள் அவர்களை விவாகம் செய்து கொள்ளலாமென்றால் அது கறுப்பு நாயை வெள்ளை நாயாக்க முயன்ற கதையையே ஒக்கும் என ஒரு கூட்டத்தார் சொல்லுகின்றனர்.

கடவுளே அவர்களை உலக இன்பமனுபவிக்கத் தகுதி யற்றவர்களென்று தீர்மானித்து விட்டாரென்றால் அதன் அர்த்தமென்ன? கடவுள் ஏன் அவ்வாறு தீர்மானித்தார்? உலகிலுள்ள சகல ஜீவராசிகளின் குறை தீர்க்கும் ஏழை பங்காளனாகிய கடவுள் இப் பெண்மக்களுக்கு மட்டும் என்றுந் தீரா இப்பெருந் தண்டனையை அளிப்பானேன்? உலக நீதிக்கு மாறாக அவர்கள் எவ்வழியிலும் நடந்து கொள்ளவில்லையே! அவ்வாறு ஒரு காரணமுமின்றி ஒரு சமூகத்தைக் கொடுமைப் படுத்த நினைக்கும் ஒரு கடவுள் கடவுளா? அவனுக்குக் கடவுள் தன்மைதான் உண்டா? அவனுக்கு ஏழை பங்காளனென்ற பெயர் பொருந்துமா? இத்தகைய வஞ்சக எண்ணமுள்ள கடவுள் ஒன்றிருக்குமாகில் அதை யேன் சுட்டுக் கொல்லக் கூடாதென அவர்களை வினவுகிறோம்.

மற்றொரு கூட்டத்தார் சொல்லுகிறார்கள்; சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் யாவும் ஒப்புக் கொள்ளக் கூடியவைகளே. ஆனால் பெண்கள் சுதந்திரத்தை மட்டும் ஒப்புக் கொள்ள முடியாது. நம் பெண்களை சுதந்திரமாக நடந்து கொள்ளும்படி விட்டு விட்டால் அவர்கள் ஒழுங்கு தவறிய வழியில் நடந்து விட மாட்டார்களோ? என்று வினவுகின்றனர்.

இதன் உள்ளர்த்தம் என்னவெனில் ஆண் மக்களின் காவல் இன்றேல் பெண் மக்கள் தங்கள் கற்பு நிலை தவறிவிடுவார்கள் என்பதாகும்.

அவ்வாண் மக்களை நாம் ஒன்று கேட்க விரும்புகின்றோம், பெண் மக்கள் தங்கள் கற்பு நிலை தவறாதிருக்கும் பொருட்டு ஆண்மக்கள் காவல் புரிகின்றாரெனில், ஆண்மக்களின் கற்பை நிலை நிறுத்த காவல் புரிபவரெவர்? ஆண் மக்களுக்கு மட்டும் கற்பு நெறி இல்லையா? ஆண்கள் மட்டிலும் சுயேச்சையாக நினைத்த வழிகளெல்லாம் செல்லலாம்; கண்டதை யெல்லாம் அனுபவிக்கலாமெனில் அவ்வுரிமை பெண் மக்களுக்கு மட்டிலும் இல்லையா? இல்லையென்று கூறும் சாஸ்திரமோ, புராணமோ, மதமோ ஒன்றிருக்குமா

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# திருச்சி ஜில்லா மூன்றாவது பார்ப்பனரல்லாதார் இளைஞர் மகாநாடு.

வரவேற்புத்தலைவர் திரு.

## டி. வி. சோமசுந்தரம் பி. ஏ. பி. எல்.

அவர்களின் சொற்பொழிவும், தலைவர்

## சர். கே. வி. ரெட்டி

அவர்களின் சொற்பொழிவும்.

—:0:—

திருச்சியில் 7-5-32ல் நடைபெற்ற திருச்சிஜில்லா மூன்றாவதுபார்ப்பனரல்லாதார்வாலிபர்மகாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவர் திரு. டி. வி. சோமசுந்தரம் பி. ஏ. பி. எல். அவர்களின் உபந்யாசச் சுருக்கம் வருமாறு:—

சகோதரப்பிரதிநிதிகளே! தோழர்களே!!

இந்த மகாநாட்டுக்கு விஜயம் செய்திருக்கும் உங்கள்அனைவருக்கும்நான் மனமார்ந்த வரவேற்பு அளிக்கிறேன்.

இந்த மகாநாடு மூன்றாவது மகாநாடாகும். பல முக்கியமான பிரச்சினைகளைப்பற்றி இந்த மகாநாட்டில் பரிசிலனை செய்யவேண்டியிருப்பதினால் முன்னைய இரண்டு மகாநாடுகளைக்காட்டிலும் இதுமுக்கியமானதென்றே சொல்லவேண்டும். ஆகவே இந்த மகாநாட்டிற்கு நமது மாபெருந்தலைவர் சர். கே. வி. ரெட்டி தலைமைவகிக்க நேர்ந்ததைப்பற்றி நான் அடங்கா மகிழ்ச்சியடைகிறேன். அவர் நமக்கு ஒரு எதிர்கால வேலைத்திட்டம் அமைப்பரென்று நம்புகிறேன். உங்களுடைய மனமார்ந்த ஒத்துழைப்பினால் இந்த மகாநாடு வெற்றியாக முடியுமென்று நம்புகிறேன்.

நமது மகாநாட்டுப்பேரை பார்த்துவிட்டு நமது எதிரிகள் நம்மை வகுப்பு வாதிகள் எனப்பழிக்கக்கூடும். நாம் மிக்க குறுகிய நோக்கமுடையவர்கள் என்றும், பொது வாழ்வில் பிரிவினையை உண்டுபண்ணுகிறோமென்றும் அவர்கள் நம்மை குறைகூறக்கூடும். உயர்ந்த ஜாதியார் நம்மை எவ்வளவுதான் பழித்தாலும் சரி, நமது இயக்கத்தைப்போன்ற ஒரு இயக்கம் தேவை என்பதை ஒருவராலும் மறுக்கமுடியாது. இந்த மகாநாட்டில் பார்ப்பனர்களுக்குப் பிரவேசனம் மறுக்கப்பட்டிருப்பதினால் இது ஒரு வகுப்பு மகாநாடு என்று சிலருக்கு ஒரு சந்தேகம் தோன்றலாம். இந்த சந்தர்ப்பத்தில் 'ஜஸ்டிஸ்' பத்திரிகையின் ஒரு ருசிகரமான அபிப்பிராயத்தை உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். ஜஸ்டிஸ் கூறுவதாவது:—இயக்க ஸ்தாபனங்களின் அபிப்பிராயம் ஒரு வகுப்பாருக்குப் பிடிக்கவில்லை யென்பதை அவர்கள்உணர்ந்திருக்கிறார்கள். வைதீக மனப்பான்மையுடையோர் எதிர்ப்பை மதியாமலே இளைஞருலகத்தின் சமூக முன்னேற்றத்துக்கு உழைக்க அவர்கள் விரும்புகிறார்கள். அந்த வைதீகர்களுக்குள்ளும் ஒருசிலருக்கு சீர்திருத்த உணர்ச்சி தோன்றியிருக்கலாம். ஆனாலும் தென்னிந்தியாவில் உயர்ந்த ஜாதியார் எனப்படுவோரில் மிக்காரும் ஜாதி இறுமாப்புக்கொண்டவர்கள் என்பதை ஒருவராலும் மறுக்கமுடியாது. அவர்களுக்கு மனமாற்றமுண்டாகும் வரை பார்ப்பனரல்லாத இளைஞர்கள் தனிமையாக நின்று உழைக்க வேண்டியது மிக அவசியமாகும். பிராமணர்களில் சிலர் தாராள நோக்கமுடையவரா யிருப்பதுபற்றி நமது இயக்கத்தின் பெயரை மாற்றவேண்டுமென்று கூறுவது பிரிட்டிஷாரிலும் சில காங்கிரஸ் அனுதாபிகள் இருப்பதினால் இந்திய தேசீய காங்கிரஸ் என்பதை வெறும் தேசீய காங்கிரஸ் என்று மாற்றவேண்டும் என்று கூறுவதற்கே ஒப்பாகும். சமூக பொருளாதார வாழ்வில் பார்ப்பனர்களே இதுவரைமுன்னிலையில்நின்று வருகிறார். அத்துறைகளில் முன்னேற நாமும் இப்பொழுது முயற்சி செய்துவருகிறோம். அம் முயற்சியில் நாம் வெற்றி பெறுமுன் பார்ப்பனர்களையும் நம்முடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறுவது தற்கொலை செய்துகொள்வதற்கு ஒப்பாகும். அகஸ்மாத்தாய்க்கிடைத்த சந்தர்ப்பங்களை ஏகபோக உரிமையாளரான ஒரு சமூகத்தார் தமது சமூக முன்னேற்றத்துக்காகவே பயன்படுத்தி வருகிறார்கள். வாஸ்தவத்தில் வகுப்பு வாதிகள் அவர்களே தவிர நாமல்ல. மாதர் சங்கத்தில் புருஷர்களைச் சேர்த்துக்கொள்ளவில்லையென்றும், அடிமைகள் சங்கத்தில் அடிமை வர்த்தகர்களைச் சேர்த்துக்கொள்ளவில்லையென்றும் தொழிலாளர் சங்கத்தில் முதலாளிகளைச் சேர்த்துக்கொள்ளவில்லை யென்றும் எவ்வாறு குறைகூற முடியாதோ அவ்வாறே பார்ப்பனரல்லாதார் சங்கத்தில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளவில்லையென்றும், குறைகூற முடியாது. பார்ப்பனர்களுக்கும், பார்ப்பனரல்லாதாருக்கும் இருந்து வரும் ஏற்றத்தாழ்வை ஒழிக்கவே நாம் பாடுபடுகிறோம். அம்முயற்சியில் நாம் வெகுவிரைவில் வெற்றி பெறுவோம் என்பதும் உண்மை. நமது முயற்சியில் வெற்றிபெற்ற பிறகு கேவலம் இயக்கப்பெயரைப் பற்றி நாம் சண்டை போட்டுக்கொண்டிருக்கமாட்டோம். வாஸ்தவத்தில் நமக்கு பிராமணரிடம் பகை கிடையாது எனினும் தனது முன்னேற்றத்துக்காக உழைக்க ஒவ்வொருசமூகத்துக்கும் உரிமையுண்டென்று நாம் நம்புகிறோம்.

அன்பர்களே! இந்தியாவின் எதிர்கால க்ஷேமம் உங்கள் கையிலேயே இருக்கிறது. இளைஞர்களால் சாதிக்க முடியாதது ஒன்றுமே இல்லை. துருக்கி, ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களிலுள்ள இளைஞர்கள் பல அசாத்திய காரியங்களைச்செய்து இளைஞரின் சக்தியை ருசுப்படுத்தி விட்டார்கள். நமக்கு தேசிய உணர்ச்சியும் தோன்றி விட்டால் பல அற்புதங்கள் செய்ய முடியும். நாம் விளம்பரத்தையோ புகழையோ விரும்பவில்லை, கருமமே கண்ணாய் உழைப்பதே நமது லக்ஷியம். அரசியல் பொருளாதார சமூக ஊழல்களில் இந்தியா வருந்து கின்றது. ஆகவே இந்தியாவின் எல்லா ஊழல்களையும் போக்கி முன்னேற வேண்டியது உங்கள் கடமையாகும். இந்தவேலைக்கு இளைஞர்களே ஆற்றலுடையவர்கள்.

இளைஞர்கள் அரசியலில் பிரவேசிக்கலாமா என்பது இப்பொழுது ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்து வருகிறது. பிறப்பினாலோ மற்றக் காரணங்களினாலோ உயர்வு தாழ்வு இல்லாத ஒரு இந்தியாவைக்காண்பதே பார்ப்பனரல்லாத இளைஞர்களின் தலைசிறந்த நோக்கமாக இருக்கிறது. அதற்காக உயிர்விடவும் பார்ப்பனரல்லாத இளைஞர்கள் தயார். சுதந்திர இந்தியாவைக்காண சமூகப்போரோ. அரசியல் போரோ எது வேண்டுமானாலும் நடந்த பார்ப்பனரல்லாத இளைஞர்கள் ஆயுத்தமாகவே இருக்கிறார்கள்.

மூடப்பழக்க வழக்கங்களையும் ஜாதியையும் ஒழிக்கவேண்டியது நம்முடைய முக்கிய கடமையாகும். ஜாதி நமது சமூகத்தைக்கெடுக்க வந்த ஒரு நச்சுமரமாக இருக்கிறது. அது எங்கும்பரவிப்படர்ந்துவிட்டது

ஆகவே அந்த நச்சுமரத்தை ஆணி வேரோடு கல்லியெறிய வேண்டும். ஜாதி ஆதிக்கம் நிலை பெற்றிருக்கும் வரை நமக்கு சுயராஜ்யமோ சுதந்தரமோ பெறமுடியாது. தீண்டாமை மற்றொரு கொடிய சாபம். ஒடுக்கப்பட்டவர்கள் மிருக வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். கல்விப்பயிற்சியில்லாமல் ஒருவன் இறப்பது பெரிய கொடுமையென்று கார்லைல் ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னார். இந்தியாவிலோ லக்ஷக்கணக்கான பேர் கல்வி கற்காமல் இருக்கிறார்கள். இதைவிட பெரிய பாதகம உண்டா? ஆகவே தீண்டாமையும் கட்டாயம் ஒழிய வேண்டும். ஏழை எளியோர் வறுமையும் ஒழியவேண்டும்.

தோழர்களே! நாம் முக்கியமாக கவனிக்கவேண்டிய பிரச்சினைகள் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. அவையாவற்றையும்பற்றிப்பேச எனக்கு நேரமும் இல்லை, விருப்பமும் இல்லை. முக்கியமானவைகளைப்பற்றியே சூசனையாகக்கூறுகிறேன். இந்தியா மெய்யாகவே முன்னேற்றமடையவேண்டுமானால் நமது பொருளாதார நிலை உயர்ந்து தீரவேண்டும். வர்த்தகம் கைத்தொழில் விருத்தியடையாமல் பொருளாதார முன்னேற்றம் அடைய முடியாது. ஆகவே அவ்விஷயத்திலும் நமது கவனம் செல்லவேண்டும்.

கடைசியாக ஒரு விஷயத்தை உங்கள் கவனத்துக்குக்கொண்டு வர விரும்புகிறேன். பல ஆங்கிலேயர் கொல்லப்பட்டதை நீங்கள் கேட்டிருப்பீர்கள் இம்மாதிரிக்கொலைகள் நம் தாய் நாட்டுக்கு ஒரு பெரிய களங்கமாகும் இம்மாதிரியான கொலைகளை நாம் வெறுக்கவேண்டும் இரத்தஞ் சிந்தாமலே சுதந்தரம் பெற நாம் முயலவேண்டும்.

தோழர்களே! சர். கே. வி. ரெட்டி நமது மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க முன்வந்தது பெரிய அதிர்ஷ்டமாகும். தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்காக அவர் செய்துள்ள சேவை அபாரமானது. ஜஸ்டிஸ் கட்சி முன்னேற்றத்துக்கும் அவர் மிக உழைத்திருக்கிறார். அவர் மந்திரியாகவிருந்த காலத்தும் நாட்டுக்கு அனந்தம் நன்மைகள் விளைந்திருக்கின்றன. அவ்வளவு ஆற்றல் வாய்ந்த ஒருவர் தலைமையில் நாம் மகாநாடு கூடுகிறோம். அவர் நமக்கு ஒரு நல்ல திட்டம் வகுத்துக்கொடுப்பார். நமது எதிர்காலம் மிக க்ஷேமமாக இருக்கப்போகிறது. எதிர்கால க்ஷேமத்துக்கு நாம் என்ன செய்யவேண்டுமென்பதே முக்கியமான பிரச்சினை இன்றைய மகாநாட்டில் அது முடிவு செய்யப்படும். இந்தமகாநாடு வெற்றியாக முடியும்படி வழி செய்யவேண்டியது உங்கள் கடமையாகும். கடைசியாக உங்களுக்கு மீண்டும் ஒருமுறை வந்தனம் கூறுகிறேன்.

## ஷை மகாநாட்டில் தலைமைவகித்த சர். கே. வி. ரெட்டி அவர்களின் சொற்பொழிவு.

இம்மகாநாட்டிற்கு என்னைத்தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்கும், எமது பழைய நண்பர்களைப் பார்க்கும் பாக்கியத்தை அளித்ததற்கும் உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன். இயற்கை ஒளியும், அழகும் செறிந்திலங்கும் இளைஞர்களாகிய உங்கள் முகங்களில் காணப்படும் ஆண்மை, வீரம், ஊக்கம்

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க)

# "புராண ஆபாசங்கள்."

[தொம்பக்குளம் தோழர் டி. பெருமாள்சாமி]

நஞ் செந்தமிழ் நாட்டின்
கண், தொன்று தொட்டு
இதி காசங்களென வழங்கப்பட்டு
வந்த பதினெண் புராணங்களுள்,
மகாபலி புராணமும் ஒன்றேயாகும்.
இவற்புத புராணத்தைக் குறித்து
சற்று ஈண்டு விளக்குவாம். ஆதியில்
திருமூர்த்தி களிலொரு வரெனத்திக
மும் பரமேஸ்வரன், தனது திருத்
தேவியாம் பார்வதியுடன் கைலாசத்
தில், ஒரு நாளிரவு பள்ளியறையில்
சயனித்திருக்கும் காலத்தில், அச்
சயனவரையிலிருந்த நெய் விளக்கின்
பிரகாசம் குறையவே, அவ்விளக்கின்
திரியைத் தூண்டுதற் கொருவரு
மிலாததால் அவ்விளக்கு அணையும்
சமயமாக இருந்ததாம். அச்சமயம்
அம் முழு முதற்கடவுளாகிய பரம
சிவனர் கண் விழிப்படைந்து, விளக்
கு அணைந்து இருள் சூழுமென
மனம் நைந்து இத்தருணம் ஸ்வர்க்க,
மத்ய, பாதாள மெனும் மூவுலகினின்
றும் எவரேனும் வந்து இவ்விளக்கை
த்தூண்டி ஒளிபெறச் செய்தால்
அன்னர்க்கு அம் மூவுலகையும் புரக்
கும் அரசனாக இருந்து அரசாட்சி
செய்யும் படி அருள் வாக்களிப்பே
னெனத்திருவுளங் கொண்டாராம்.
முக்கண் . மூர்த்தி முகம் ஐந்தாம்,
கண்மூன்றும் தோட்கள் எட்டாம்
என்ன கணக்கோ? விந்தை!........
இவ்வண்ணம் கருதி யிருப்ப வெகு
நேரம் இரை கிடையாமல் அங்கு மிங்
கும் அலைந்து திரிந்து ஒரு எலி,
அச்சமயம் அவ்விளக்கண்டை வந்து
அதிலிருந்த நெய் முழுதையும் குடித்
துவிட்டுத் திரும்புங்காலை, தற்செய
லாய் அதனுடைய வால் அசைந்து
அவ்விளக்கின் திரியிற்பட அத்திரி
சற்று மேலெழும்பி அச்சபா மண்ட
பமெங்கும் பளீரென அவ்விளக்
கொளி பரவியதாம். இவ்விதம் பிர
காசிக்கவே பேரானந்த முற்ற அப்
பெருமான் அவ்வெலியை நோக்கி,,
ஓ! எலியே!! பூலோகத்திலே மகாப
லிபுரமென்னும் ஒரு பெரியபட்டண
மிருக்கிறது. நீ அப்பட்டணத்திலே
போய் பிறந்து மகாபலிச்சக்கரவர்த்தி
யெனும் நாமம் பூண்டு, ஸ்வர்க்க மத்ய
பாதாள மெனும் மூன்றுஉலகும்புரக்
கும் பெருங்கொடை வள்ள லெனப்
பெயர் தாங்கி சர்வ சம்பத்தினனாய்
நித்ய கல்யாண குணனுபவ சிங்கார
கோலாகல வைபவத்துடன் சிங்கா
தனத்திலமர்ந்து மனு நீதிதவறாமல்
செங்கோல் செலுத்தி முடிவில்
முத்தியடைவா யெனக் கட்டளையிட்
டார். (சும்மா இராமல் எண்ணெயைக்
குடிக்கப்போய் எலிக்குப் பிடித்தது
சனியன், எல்லாம் ஈசன் செயல்
அவனன்றி ஓரணுவும் அசையாதல்ல
வா? எல்லாம் வல்ல அந்தச்சிவபெரு
மான் வாக்குப்பொய்க்குமா? உடனே
எலியானது தன்னுடல் நீத்து மனித
வடிவமாகி அந்த மகாபலிபுரத்திலே
யே இருந்து திரிலோகங்களுக்கும்
அரசனாகவும் தெய்வபக்தியில் சிறந்த
வனாகி, ஏழைகளுக்கில்லை யெனாது
கொடுக்கும் கொடைவள்ளலாகச் சிங்
காதனத்திலிருந்து மனுநீதி தவறாது
செங்கோல் செலுத்தி வந்தானாம்.
இவ்வண்ணம் மகாபலி நீதியோடு
அரசு புரிகின்ற காலை அவ்விஷயங்
களை அறிந்த விஷ்ணுவானவர் அன்
னவரைச் சோதிக்கவுன்னி (வாமன
வதாரம்) ஒரு குள்ளப்பிராமண வடி
வங்கொண்டு, சக்கர வர்த்தியின்
அரண்மனை வாயலில் பிச்சைக்குச்
செல்வது போற் போந்தார். மகாபலி
யும் அப்பிராமண முனிவனைக்கண்ட
வுடனே, பணிந்து சோடச உபசா
ரங்கள் புரிந்து ஓர் பொற்பீடத்தி
ருத்தி,, தேவரீர் தாங்கள் இவ்விடம்
எழுந்தருளிய தென்ன காரணமோ
தெரிவிக்க வேண்டுகிறே னெனச்
சொன்னர். பிராமண முனிவன்
தன் காலடியால் (வேள்விக்கு) மூன்
றடி மண் கேட்டார். அரசன் இல்லை
எனுஞ் சொல்லறி யானதலால் அப்
பிராமணனின் வேண்டு கோட்படி
தந்தே னெனத் தாரைவார்த்துக்
கொடுத்தான். உடனே கள்ளனகவந்த
குள்ளப்பிராமண வேட தாரியாகிய
விஷ்ணுவானவர், அரசனுடைய
கர்வத்தை அடக்க வுன்னி ஆகாய
மளாவ விஸ்வ ரூபமெடுத்துத்தன்
ஒரு காலடியால் பூலோகமெல்லாம்
ஓரடியாகவும் மேலே அண்டத்தை
மற்றொரு காலால் 2 வது அடியாக
வும் அளந்து 3 வது அடிக்கு இட
மெங்கே எனக் கேட்க பலிச்சக்ர
வர்த்தியானவன் உடனே திகைத்த
வனாய் இன்ன தெனத் தோன்றாது
வேறே இடமு மிலாது பயந்து!!
எனது தலைதான் மீந்தது!! எனத்
தன் தலையைக் காட்டினனாம்.
உடனே விஷ்ணு மூன்றாவது அடிக்
கு அரசன் தலை மீது தன் அடிவைக்
கவே அரசன் பாதாள லோகத்திற்
போய் அமிழ்ந்து விட்டதாகவும்
இன்னும் கதை மேலே வளர்கின்
றது. நாமும் இத்துடன் நிறுத்திக்
கொண்டு இது வரைக்கும் நடந்த
விஷயங்களைச்சற்று ஆராய்ச்சிசெய்
வோம்.

சர்வ வல்லமையுள்ள மேலும்
இவ்வு லகத்தையே உண்டாக்கிய,
எங்கும் நிறைந்த பகவான், அவருக்
குப் பகலுமில்லை, இரவுமில்லை, வெ
யிலிலும் காயாத மழையிலும் நனை
யாத கோடி சூரியப் பிரகாசம் பொ
ருந்திய சிவபெருமானுக்கு, இருட்டு
ஏது? இருட்டிருப்பினும் அவ்விருட்
டை நீக்க விளக்கு வைத்துக்கொள்ள
வேண்டுமா? என்ன ஆச்சரியம்
பாருங்கள் வெட்கம்................
மனிதனுக்குத் தான் இருட்டுண்
டென்பார்கள், அல்லிலும் பகலிலும்
இரண்டறக்கலந்து எங்கும் நிறைந்த
கடவுள்,, இருள் நீங்கி எங்கணும்
சோதியுண்டாகுக,, என நினைத்தால்
இருள் நீங்கி ஒளியுண்டாக்கி 'நிலைத்
துநிற்காதா? அல்லது அச்சக்தி
இவரிடத்தி வில்லையா? அல்லது
இவர் தான் பகவானில்லையா? என்று
தான் கேட்கிறேன். இக்காலத்தில்
அறிவில் மிகுந்த ஒரு மேனட்டான்
நாகரீகத்தில் மிகக் குறை வடைந்த
வனாயிருந்தும் இருள் நீங்கி ஒளிபரப்
பக்கண்டு பிடித்துப் புகை வண்டி
யின் முகப்பில் அமைந்திருக்கும்
சர்ச்லைட் ஒன்றை யாவருமறிவர்.
அது சுமார் 20 மைலுக் கப்பால்
வரும் போதே கோடி சூரியப்பிரகா
சம் போல் தோன்று வதுந்தவிர வலி
மிக்க வாயுபகவானும் வருணதே
வனும் அதன் பக்கம் நெருங்கி
அணைத்து விட முடியாது, முடியவே
முடியாது என்பது நிச்சயம். ஆகவே
எல்லாவற்றையும் சிருட்டித்த சர்
வவல்லமையுள்ள பரமசிவன் நெய்
யை எலி குடித்து விடும்படி ஓர்
கிளியஞ் சிட்டியிலே நெய்யை ஊற்றி
விளக்கு எற்றி வைத்திருந்ததாக
புராணம்கூறுகிறது. ஓர் வெள்ளைக்
காரனுக்குள்ள அறிவு இப்பரமசிவ
னுக்கில்லை என்று தானே தீர்மானிக்
கவேண்டிய திருக்கின்றது, ஆனல்
இதிலிருந்து என்ன தெரிகிற தென்
றால், மக்களை எமாற்ற, ஆரியர் புரா
ணம் எழுதுகிற காலங்களில் கிளி
யஞ் சிட்டியைத்தவிர வேறெவ்வித
மான விளக்கும் இருந்த தில்லை,
ஆகவே அக்கிளியஞ் சிட்டித்தீபத்
தை யே உயர்ந்த தேவதீப மெனக்
கற்பித்து விட்டன ரெனத் தெரிகி
றது. இஃதிவ்வாறிருக்க விஷ்ணு
வானவர் 3 அடியாக அளந்த விஷயத்
தை எடுத்தாராய்வோம். மகாபலிச்
சக்கரவர்த்தி ஒரு பக்தன். தவிரவும்
சத்திய வந்தன் நிறைந்த தெய்வபக்
தியுள்ள வனெனப் புராணம் கூறுகி
றது. அன்னரிடத்தில் முன் கேட்டுக்
கொண்டபடியே விஷ்ணுவானவர்
தன் காலடியால் பூலோகத்தை எல்
லாம் ஒரே அடியாக அளந்து விட்
டாராம், 2 வது அடிக்கு ஆகாயத்தில்
தன் காலால் முழுவதும் அளந்து
விட்டு 3 வது அடிக்கு இடமெங்கே
யெனக் கேட்கிறார். சக்கரவர்த்தியும்
வேறு இடமிலாது தன் தலையையே
காட்டுகின்றா ரெனப் புராணம் கூறு
கிறது. ஆனல் சமஸ்த ஜீவராசிகளும்
தன் காலின் கீழமையும் படி பூலோ
கத்தை எல்லாம் ஒரே அடியில் மிச்ச
மில்லாமல் அளந்தாய் விட்டதே?
இந்நச்சமயம் மாபலி பூமியில் எந்தப்
பக்கத்திலிருந்து தன் தலையைக்
காட்டுகிறார்? அவருக்கு நிற்கவோ
தலையை நீட்டவோ இடமெங்கே
யிருந்தது, எங்கே யிருந்து பேசுகி
றார்? இதை யோசிக்கில் புரட்டிலும்
புரட்டாக வன்றோ இருக்கின்றது.
வெட்கம்......... வெட்கம்.........
பூமி உருண்டையான வடிவத்தை,
உடையது ஆகவே அதை அளந்த
இவருடைய பாதமும் உருண்டையை
அளக்கும் மாதிரி வட்டமாகத்தானே
இருந்திருக்க வேண்டும்? ஆனல்
யானைத் தடத்திற்கும் இவருடைய
காலுக்கும் வித்தியாச மில்லை போ
லும்...... விஷ்ணு வானவர் 3 வது
அடிக்கு இடமெங்கே யெனக் கேட்
கும்போது அரசன் இடமில்லாது
திகைக்கிற தாகத் தெரிகிறது,
பரமசிவன் தனக்கு வரமளித்தபடி
ஸ்வர்க்க-மத்ய-பாதாள மென்னும்
மூன்றுலகுக்கும் மாபலி அரசன்
தானே? அண்டத்தையும், பூலோகத்
தையும் 2 அடியாக அளந்த பின்
மூன்றாவது அடிக்கு ஏன்? தனக்
குண்டான பாதாள லோகத்தையும்
காட்டி யிருக்கப் படாது? பாதாள
லோகத்தையே மறந்து விட்டாரா?
அல்லது பாதாள லோக மிருப்பதே
பொய்யா? பரமசிவன் வரம் கொடுத்
தது பொய்யா? இல்லை, மாபலி தனக்
குப்பிற்காலம் வேண்டுமென மறைத்
தனனயின் கொடை வள்ளலெனும்
பெயர், எவ்வாறு தகும்? என்பதை
நினைத்தால், முன்னுக்குப் பின்
முரணகவும், ஆபாசமாகவும், அருவரு
க்கத்தக்கதுமாக இருக்கிறதே யொ
ழிய, உண்மையில் இது ஒரு தெய்
வீக சம்மந்த மான புராண மென்று
ஒரு அறிவுள்ள மனிதன் ஒப்புக்
கொள்ள முடியுமா? இந்த விதமாக
ஆபாசமான புராணங்களையும், கதை
களையும் எழுதி, மக்களை நம்பச்
செய்து, நம் நாட்டை முற்றிலும்
ஆரியர் கெடுத்து விட்டார்கள், இனி
மேலும் கண் மூடிக்கொண்டிருந்து
விடாமலும், இவ்வித அர்த்தமற்ற
ஆபாசக்கதை களடங்கிய புராணங்
களையும் அதிலுண்டான சாமிகளை
யும், கோயில் களையும் அழிக்க
வீறிட் டெழுங்கள், நாஸ்திகப்
பட்டத்தை நாடுங்கள், மக்களை
நசிக்கச்செய்யும் புராணங்களை மண்
ணுட் புதையுங்கள்.

## சென்னையில் ஆதிதிராவிடர் சமூக சீர்திருத்தமகாநாடு.

15-5-32 ந்தேதி சென்னை பெரம்
பூரில் ஆதிதிராவிட சமூக சீர்திருத்த
மகாநாடு நடை பெற்றது. அம்
மகா நாட்டை திராவிடன் ஆசி
ரியர் திரு. டி. வி. சுப்பிரமணியம்
அவர்கள் காடியேற்றினர். திரு.
ஏ. பி. பார்த்தசாதியார் அவர்கள்
தலைமை வகித்தார் திருவாளர்கள்
பண்டித திருஞான சம்மந்தர்.
அருணகிரியார். பால குருசிவம். சிவ
சண்முகம், வரதராஜபாகவதர், அய்
யாக்கண்ணு மேஸ்திரியார் ஆர். பி.
சாமி, முதலியவர்கள் பேசினர்கள்
இடைஇடையே திருமதி. கமலவேணி
யம்மையாரவர்கள் சுயமரிவாதைக்
கீதம் பாடினர். பின் சில தீர்மானங்
கள் நிறை வேறிய பின் கூட்டம்
கலைந்ததென ஒரு நிருபர் எழுது
கிறார்.

### சேலம் ஜில்லா முதலாவது

# சுயமரியாதை மகாநாடு.

## ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள்.

### அளவுகடந்த உற்சாகம்.

### தோழர்களின் வீரஉரைகள்.

### பெண்மக்கள் பெருங்கூட்டம்.

—:0:—

சேலம் ஜில்லா முதலாவது சுயமரியாதை மகாநாடு 7—5—32ந் தேதி காலை 7-மணிக்கு சுயமரியாதைப்பார்க்கில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் நடைபெற்றது. அதுசமயம் வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள், திருவாளர்கள் எம். சிங்காரவேலு அவர்கள் பி. ஏ. பி. எல்., புதுவையமைச்சர் ஏ. வி. முத்தையா அவர்கள் பி. ஏ. பி. எல்., பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி, எஸ். வி. லிங்கம், ஏ. பொன்னம்பலனார், காரைக்குடி சுப்பையா, சி. ஆர். லிங்கம், புதுவை பாரதிதாசன், எஸ். குருசாமி பி. ஏ, திருமயம் சின்னையா, சந்திரையா, அர்த்தனாரி, எஸ். சி. ரங்கசாமி, வி. பார்த்தசாரதி. வரதராஜுலு, ராமசுப்பிரமணியம், திருமதிகள் எஸ். குஞ்சிதம் பி. ஏ., ஈ. வெ. ஆர். நாகம்மாள், எஸ். காந்தம், எஸ். சகுந்தலா, எஸ். நீலாவதி, சி. சிவகாமி, விசாலாட்சி, ஆர். அன்னபூரணி, மிஸஸ். சின்னையா, சிங்காரம் அம்மாள், முதலியவர்களும், இன்னும் உள்ளூர் வெளியூர்களிலிருந்து ஏராளமான ஆண்களும், பெண்களும் விஜயம் செய்திருந்தனர்.

வரவேற்புக்கழகத்தலைவர் திரு.கே. ஆர். வி. அர்த்தனாரி அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்று தமது வரவேற்புப் பிரசங்கத்தை படித்தார். (அது சென்றவாரபத்திரிகையில்வெளிவந்துள்ளது) பின் மகாநாட்டைத்திறந்து வைக்கும்படி புதுவையமைச்சர் திரு. ஏ. வி. முத்தையா பி. ஏ., பி. எல்., அவர்களை வரவேற்புகழகத் தலைவர் கேட்டுக்கொண்டார் அதன்படி திரு. முத்தையா அவர்கள் திறந்துவைக்கும் முகத்தான் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கைகளை விளக்கி சுயமரியாதை இயக்கத்தைக்கண்டு சிலர் பயப்படுவதாகவும் அப்படி பயப்படவேண்டியதில்லையென்றும் அறியாமையென்னும் இருளை அகற்றி மக்களை விழிப்படையச் செய்வதே சுயமரியாதை இயக்கத்தின் நோக்கமென்றும் இன்னும்பல அரிய விஷயங்களைக்கூறி மகாநாட்டைத்திறந்துவைத்தார். பின் மகாநாட்டிற்கு தோழர் எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமை வகிக்க வேண்டுமென்று திரு. சந்திரையா அவர்கள் பிரரேபிக்க திரு. பொன்னம்பலனார் ஆமோதிக்க திருமதிகள் குஞ்சிதம், அன்னபூரணி, திரு. குருசாமி முதலியவர்கள் ஆதரித்துப்பேசியபின் திரு. எம். சிங்காரவேலு அவர்கள் தலைமை வகித்து தமது தலைமை பிரசங்கத்தைப்படித்தார் (அது நமது பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது) பின் பலர் பேசினார்கள் மணி 12-30 க்கு சாப்பாட்டிற்காக மகாநாடு கலைந்தது.

### பெண்கள் மகாநாடு.

அன்று மாலை (7—5—32) 3-மணிக்கு சுயமரியாதை மகாநாட்டுப்பந்தலிலேயே பெண்கள் மகாநாடு நடைபெற்றது. மகாநாட்டிற்கு ஏராளமான பெண்கள் வந்திருந்தார்கள். பின்வரவேற்புத்தலைவர் திருமதி சிங்காரம் அம்மாளவர்கள் தமது வரவேற்புப்பிரசங்கத்தைப் படித்தார் (அது சென்றவாரபத்திரிகையில் வெளிவந்திருக்கிறது.) பின் திருமதி அன்னபூரணி அவர்களை மகாநாட்டைத்திறந்து வைக்கும்படி திருமதி சிங்காரம் அம்மாளவர்கள் கேட்டுக்கொண்டார் அதன்படி திருமதி அன்னபூரணி அவர்கள் மகாநாட்டைத்திறந்து வைத்து ஒரு அரிய சொற்பொழிவு ஆற்றினார். (அது மற்றொரு பக்கம் பார்க்க) மகாநாட்டிற்கு திருமதி நீலாவதி அவர்களை தலைமை வகிக்கும்படி முறையே பிரேரேபித்தும் ஆமோதித்தும் ஆதரித்தும் பேசியபின் திருமதி நீலாவதி அவர்கள் தலைமை வகித்து தமது தலைமைப்பிரசங்கத்தைப் படித்தார் (இது சென்றவாரம் வெளியாகி இருக்கிறது) பின்பலர் பேசினார்கள். பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் மகாநாடு மாலை 7-மணிக்கு கலைந்தது.

### தோண்டர்கள் மகாநாடு.

மறுநாள் (8—5—32) காலை 9 மணிக்கு சுயமரியாதைத்தொண்டர்கள் மகாநாடு நடைபெற்றது. அது சமயம் முதல் நாள் வந்திருந்தவர்களுடன்கூட கீழ்க்கண்டவர்களும் வந்திருந்தனர். திருவாளர்கள் கோவை வெரிவாட செட்டியார் எ. ஆர். சிவானந்தம். டி. வி. சுப்பிரமணியம். பண்டித திருஞான சம்பந்தம், முசிரி கந்தசாமி, ஈ. வி, ஜெயராம் முதலியவர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

பின் மகாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவர் திரு. சித்தையன் அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்று தமது வரவேற்புப்பிரசங்கத்தைப்படித்தார். பின் திராவிடன் ஆசிரியர் திரு. டி. வி. சுப்பிரமணியம் அவர்களை மகாநாட்டைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி திரு. சுப்பிரமணியம் அவர்கள் மகாநாட்டை திறந்துவைத்து அரிய சொற்பொழிவு ஆற்றினார். (சென்றவாரம் வெளிவந்திருக்கிறது) மகாநாட்டிற்கு ஜோலார்ப்பேட்டை திரு.வி. பார்த்தசாரதி அவர்கள் தலைமைவகிக்க வேண்டுமென்றுமுறையே பிரரேபிக்கப்பட்டுஆமோதிக்கப்பட்டு ஆதரிக்கப்பட்டபின் திரு. வி. பார்த்தசாரதி அவர்கள் தலைமைவகித்து தமது தலைமைப்பிரசங்கத்தைப்படித்தார் (அது சென்றவாரம் வெளிவந்திருக்கிறது)

ஜஸ்டிஸ் கட்சியை தோற்றுவித்த டாக்டர் டி. எம். நாயர் அவர்களின் உருவப்படத்தைத் திறந்துவைக்கும்படி கோவை திரு. வெரிவாட செட்டியார் அவர்களைக் கேடடுக்கொள்ளப்பட்டது அதன்படி திரு வெரிவாட செட்டியார் அவர்கள் ஓர் அரியசொற்பொழிவு நிகழ்த்திப்படத்தைத்திறந்துவைத்தார் (அது மற்றொரு பக்கம் பார்க்க)

### தீர்மானங்கள்.

செங்கற்பட்டு, ஈரோடு, விருதுநகர் மகாநாடுகளில் நிறைவேறிய தீர்மானங்களை இம்மகாநாடு ஆதரிக்கிறது என்ற தீர்மானத்தை பிரரேபித்து திருமதி அன்னபூரணி அவர்கள் போதுஜனங்கள் சுயமரியாதைக் கொள்கைகளையும், சுயமரியாதை இயக்கத்தையும் எளிதில் உணரும் வண்ணம் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதை திருமதிகள் குஞ்சிதம், சிவகாமி திரு. பொன்னம்பலனார் ஆகியவர்கள் ஆமோதிக்க தீர்மானம் நிறைவேறியது.

திருமதி குஞ்சிதம் அவர்கள் ஷை தீர்மானத்தை ஆதரித்து ஆங்கிலத்தில் சுயமரியாதை இயக்கம் செய்துள்ள வேலைகளையும் அதன் கொள்கைகளையும் விளக்கி ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார் அதை திரு. குருசாமி மொழி பெயர்த்தார், திரு. பொன்னம்பலனார் அவர்களும் தீர்மானதை ஆதரித்து ஒரு சொற்பொழிவாற்றினார்-

பின் திரு. கே. வி. அழகர்சாமி அவர்களை ஒரு நண்பர் கேள்விகள் கேட்டார் திரு. அழகர்சாமி அவர்கள் அக்கேள்விகளுக்குத்தகுந்த உதாரணங்களுடன் பதில் கூறினார். பின் தலைவர் முடிவுரையுடன் தொண்டர்மகாநாடு முடிந்தது.

### சுயமரியாதை மகாநாடு.

அன்று மாலை (8—5—32) 3-மணிக்கு சுயமரியாதை மகாநாடு மீண்டும் தோழர் சிங்காரவேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

### தீர்மானங்கள்.

பின் கீழ்க்கண்ட தீர்மானத்தை 'தமிழன் ஆசிரியர் திரு. ஜி. அப்பாதுரையார் அவர்கள் பிரரேபித்தார்.

1. செங்கல்பட்டு, ஈரோடு, விருதுநகர், மகாநாடுகளில் நிறைவேறிய தீர்மானங்களை இம்மகாநாடு ஆதரிக்கிறது. என்பதைப்பிரரேபித்து பேசும்போது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை விளக்கி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதை திருமதி எஸ். சகுந்தலா அவர்கள் ஆமோதித்தார் அதன் பின்

2. 'தேசீய சபை என்று சொல்லிக்கொண்டு காங்கிரசின் பேரால் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயலுவதை இம்மகாநாடு கண்டிக்கிறது' என்ற தீர்மானத்தை 'திராவிடன் ஆசிரியர்' திரு. டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் பிரரேபித்தார். அதை திருவாளர்கள் பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி, எஸ். குருசாமி, பண்டிதர் திருஞானசம்பந்தர், ஏ. பொன்னம்பலனார், எஸ். வி. லிங்கம், முதலித்வர்கள் ஆமோதித்தும் ஆதரித்தும் பேசினார்கள். மேற்கண்ட தோழர்கள் காங்கிரசின் புரட்டையும், பார்ப்பனர்கள் ஏமாற்றுதலையும் மதியல், ஹிந்தி, சுதேசி முதலியவைகளின் சூழ்ச்சிகளையும் விளக்கி பேசுங்கால் பொது ஜனங்கள் செய்த ஆரவாரமும் உற்சாகமும் குறிப்பிடத்தக்கது. பின் தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசி வந்தனோபசாரங்கூற மகாநாடு மாலை 7-மணிக்கு கலைந்தது

(நமது நிருபர்,)

---

## "புதுவை முரசு"

### அபிவிருத்தி ஏற்பாடு.

சண்ட மாருதம் நின்றது புதுவை முரசை முன்னிலும் விரிவான முறையில் நடத்த வேண்டியதற்கான பல யோசனைகளைப் புதுவை முரசின் வாசகர்களும் அபிமானிகளும் கூறி வருவது பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வர வேண்டியதிருக்கிறது.

வாரமிருமுறை வெளியாக்குவதா? புதுவைமுரசு எப்போதும் போல் வாராந்தரமாகவே இருக்க அநுபந்தம் மாத்திரம் வார மும்முறை வெளிப்படுவதா? என்பவையே யோசனையிலுள்ளவை. விருப்பவை 6—6—32க்குள் முடிவு தெரிவிக்கப்படும் அது வரைக்கும் புதுவை முரசு வெளிவராது.

எஜண்டுகள் பாக்கியை அனுப்பி விட வேண்டும். இனி,எஜெண்டுகளின் நிபந்தனைகளில் பூர்வாங்கமான மாற்றம் ஏற்படுத்த உத்தேசம். பாக்கி வைத்திராத எஜெண்டுகளுக்கு மாத்திரம் விசேஷ சலுகை காட்ட முடியும்,

வெளியிடுவோர்,
எஸ். சிவப்பிரகாசம்,

# ஜினிவா சர்வதேச தொழிலாளர் மகாநாட்டில் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்களின் வீர முழக்கம்.

ஜினிவாவில் நடந்த 16-வது சர்வதேச தொழிலாளர் மகாநாட்டில் அகில உலகத்தொழிலாளர் சங்கத்தின் டைரக்டர் அறிக்கையைப்பற்றி விவாதம் நடந்த போது, இந்திய முதலாளிகள் பிரதிநிதியாகச் சென்ற திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் பேசியதாவது:—

இதுவரையிலும் ஜினிவாவில் நடந்த 3 மகாநாடுகளில் நான் கலந்து கொண்டிருக்கின்றேன். சர்வ தேச தொழிலாளர் சங்கம் ஐரோப்பாவுக்கு வெளியே உள்ள நாடுகளின் பிரச்சினைகளைச் சரியாகக் கவனிப்பதில்லை யென்பதே எனது அபிப்பிராயம். ஐரோப்பிய நாடுகளில் நிலவும் சமுதாய, தொழில் நிலைமைகளையே ஆதாரமாகக்கொண்டு ஒப்பந்தங்கள் ஏற்படுத்துவது வழக்கமாக விருக்கிறது. ஆசியா நாடுகளின் விசேஷ சமுதாய நிலைமைகளைக் கவனிப்பதில்லை. இம்முறையில் நடந்து கொள்வதால், சர்வ தேச சங்கத்தின் நோக்கம் என்னவோ அது பூர்த்தி ஆவதாகவில்லை. ஒவ்வொருதேசத்தின்விசேஷ நிலைமைகளுக்கு ஏற்றபடி ஒப்பந்தங்களில் விதிவிலக்குகளைச் சேர்த்துக் கொள்ளலாமென்பது நேர்மையானதல்ல. சர்வதேச தொழிலாளர் சங்கம் முற்றிலும் நன்மை செய்யவேண்டுமானுல், ஐரோப்பாவுக்கு வெளியேயுள்ள நாடுகளின் சமுதாய பொருளாதார நிலைமைகளை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். முதன் முதலாக, ஆசியா கண்டத்தைச் சார்ந்த சில நாடுகள் சர்வதேச தொழிலாளர் மகாநாட்டு ஒப்பந்தங்கள் சிலவற்றை ஏன் அங்கீகரிக்க வில்லை என்ற தோரணையில், இது வரை நிறைவேறிய தீர்மானங்களையெல்லாம் சர்வ தேசத்தொழிலாளர் சங்கம் மீண்டும் ஆலோசனை செய்ய வேண்டுமென்று நான் கேட்கின்றேன். இந்தியா சினு, ஜப்பான் இந்நாடுகளில் சில ஒப்பந்தங்களை ஏன் அமுலுக்கு கொண்டு வரவில்லை யென்பதற்கு காரணத்தை அறிய சர்வதேசத்தொழிலாளர் சங்கம் இதுவரையிலும் ஏதாவது பிரயாசை எடுத்துக் கொண்டதாஎன்று நான் கேட்கின்றேன்?

1930-ம் வருஷம் டிப்டி டைரக்டர் பேசுகையில் ஒவ்வொரு தேசத்தின் விசேஷ நிலைமைகளோடு மாறுபடாதபடி, எல்லா நாடுகளிலுமுள்ளதொழிலாளர்கள் நிலைமை சமமானதாக விருக்க வேண்டுமென்பதற்கு வழிகாணுவதே முக்கியமான பிரச்சினையாகுமென்று கூறினர். இந்த விஷயத்தில் முரண்பாடே எவ்விதத்திலுமில்லை யென்பதே எனது நம்பிக்கை. உலக மெங்கும்தொழிலாளர்கள் நிலைமை சமமானதாக விருக்க வேண்டு மென்பதேஇந்த ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கமாகும். அந்நோக்கம் நிறைவேறுதற்கு சகல தேசங்களிலும் உள்ள தொழிலாளர் சம்பந்தமான சட்டங்கள் யாவும் ஒன்ருக இருக்க வேண்டு மென்பது ஒரு வழியாகும். டைரக்டர் தமது அறிக்கையில் குறிப்பிட்டபடி சகல நாடுகளின் சட்டங்கள் எல்லாம் ஒன்ருக இருக்கவேண்டு மென்பதில் மிக்க கவனஞ் செலுத்தி, உலகெங்கும் தொழிலாளர் நிலைமை திருப்திகரமாகவும் சமமாகவும் இருக்க வேண்டுமென்பதைக்கைவிடுவாரானுல் அதுநன்ருகாது. சட்டங்கள் பலவிதப் பட்டதாக விருந்த போதிலும், தொழிலாளர்களின் நிலைமை சிறந்திருக்கும்படிச் செய்யக்கூடு மென்பது நிரூபிக்கப் பெறுமானுல் சர்வ தேசத்தொழிலாளர் சங்கத்தின் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு அதுவே சிறந்த வழியாகும். தொழிலாளர்கள் நிலைமை முன்னேற்றமடைய வேண்டு மென்பதே முக்கியமானது; சட்டங்க ளெல்லாம்ஒன்ருக விருப்பது அவ்வளவுமுக்கியமல்ல.

சமாதான உடன் படிக்கையின்படி ஏற்பட்ட கடமையை இச் சங்கம் சிறந்த முறையில் பூர்த்தி செய்யும் வேலைக்கு உதவி புரிய வேண்டு மென்ற விருப்பத்தாலேயே நான் இவ்வாறு கூறினேன். "குடிகள் சிறந்த முறையில் வாழ்க்கையை நடத்தும்படிஉதவி புரிய வேண்டுவதே ராஜாங்கத்தின் கடமை" என்று கிரீக்ஞானியாகிய அரிஸ்டாடில் என்பவர் கூறியுள்ளார். அதனையே சமாதான உடன்படிக்கையும் வற்புறுத்திக்காட்டுகிறது. உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தின் பிரஜைகளும் நல்ல வாழ்க்கையை நடத்தும்படி சமுதாய நிலைமை ஏற்பட பாடுபட வேண்டுவதே சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் கடமையாகும்.

# "தந்தை செய்து வைக்காதவைகளை மகன் செய்து வைப்பான்"

(திரு. வீ. மு. செல்லையா)

இது ஒரு பார்ஸிப்பழமொழியாகும்; இதில அருமையான சில கருத்துக்கள் பொதிந்துள்ளன. இப்பழமொழியைப் பற்றி, லாகூரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில், பண்டிதமோதிலால்நேரு, தனது பிரசங்கத்தில் சிலாகித்துப் பேசியுள்ளார். இப்பழமொழி இன்றும் பார்ஸியில் வழங்கிவருகிறது.

° °

இப்பழ மொழியின் உட்கருத்து எதுவெனில், தந்தையினுல் செய்ய முடியாத காரியங்களை—போக்கவியலாத மூடப்பழக்க வழக்கங்களை மகனுகிய இளைஞனுல் தான் போக்க முடியும்; மற்றபடி, தந்தையின் தமையனுலோ. அன்றி அவர்கள் காலத்திலிருந்தவர் களினுலோ செய்ய—போக்கமுடியாது, என்பதேயாம்; இன்னும் இதை ஆராய்ந்து பார்த்தால், இளைஞரால் செய்ய முடியாத காரியங்களே உலகில் கிடையாது, என்ற முடிவுக்குக் கொண்டுவந்து விடும்.

° °

ஒரு நாட்டின் விடுதலை பெரும்பாலும் இளைஞர்களின் முயற்சியினுல் தான் அடைகிறது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். பிரான்ஸ் தேசத்தை முதலாளிகளின் ஆதிக்கத்திலிருந்து பிடுங்கி, தொழிலாளிகளின் ஆதிக்கத்திற்குக் கொண்டு வந்து உதவியது யார்? நெப்போலியன் என்னும் வீர இளைஞனன்ருே? தன் தந்தையின் காலத்தில் மிக மிகக் குறுகியிருந்த ராஜ்யத்தை, தனது முயற்சியினுல் மிகவும் விசாலமான ராஜ்யமாக்கி உலகத்திலேயே ராஜ்யங்களைச் ஜெயிப்பதில், தனக்கு நிகர்தானே என்று பேரும், புகழுமடைந்தவன்யார்? மகா அலக்ஸாந்தர் எனும் இளங்காளையன்ருே? இன்னும் பிறநாட்டு இளைஞர்களின் வீரதீரங்களைப் பற்றி சரித்திரவாயிலாக அறிந்திருக்கிருேம். அந்நாட்டு இளைஞர் களினுலேயே தான், அந்நாடு விடுதலையடைந்துள்ளதென்பதையும் அறிந்திருக்கிருேம்.

° °

உதாரணமாக, ஒரு நாட்டிற்கும், இன்னெரு நாட்டிற்கும் யுத்தம் நிகழ்வதாக வைத்துக் கொள்ளுவோம். ஒருநாடு ஜெயமடையவேண்டுமானுல், அந்நாட்டுச் சேனையையே பொருத்திருக்கிறது; அச்சேனையில் சிப்பாய்களாக விருப்பவர்கள் யார்? முதியோர்களா? அன்று; அன்று. பின்னே யாரெனின், இளஞ்சிங்கங்களே. இவ்விடத்தில் ஓர் மேல் நாட்டுக்கவி கூறிய ஒரு வார்த்தை நினைவிற்குவருகிறது. "ஒரு நாட்டைக்கீழ் நிலைக்குக் கொண்டு வருவதும், மேல் நிலைக்குக்கொண்டு வருவதும் இளைஞர்களைப் பொறுத்ததாகும். இளைஞர்களினுல் செய்ய முடியாத காரியங்களே உலகில்கிடையாது. இளைஞர்களில்லையேல் உலகமே தலைகுப்புறம்புறண்டு விடும்" எனஇன்னும்இவை போன்ற புகழ்மொழிகளைக் கூறியிருக்கிருர்.

° °

இவ்வளவு சிறப்புவாய்ந்த இளைஞர்கள் இன்னும் உறங்கிக்கொண்டிருந்தால், நம் இந்தியா ஒரு 'போதும் விடுதலையடையா தென்பது திண்ணம். பிறநாட்டினரும் நம்மை மனிதஇனத்தில் சேர்க்கமாட்டார்கள். இப்பொழுதிருக்கும் கொஞ்ச நஞ்ச மதிப்பும் இல்லாமல் போய் விடும்.

° °

நீங்கள் பிற நாட்டினரைப்போல சுயமரியாதை யோடு வாழ வேண்டுமானுல், உடனே வீட்டை விட்டு வெளிப்புறப்படுங்கள்; கிராமங்கள் தோறும் சென்று மக்களுக்கு அறிவூட்டும் விஷயங்களைப் போதியுங்கள்; அவர்களைநல்ல வழிக்குக் கொண்டுவர முயலுங்கள்: நிறத்தினுலும், பிறப்பினுலும் வித்தியாசம் கற்பிக்கும் சாதி, மத மூடப்பழக்க வழக்கங்களை போக்கமுயலுங்கள்; காளி, மூளி காட்டேரி, சாமுண்டி, மாரி, தாலியைப்பறிகொடுத்த கடவுள் முதலிய கற்களை—பொம்மைகளை—கண்ணுக்கும், அறிவுக்கும் எட்டாதசாமிகளைக் குழிவெட்டிப்புதைக்கமுயலுங்கள்; ராமாயணம், பாகவதம் முதலிய மக்களது அறிவைக் கெடுக்க வல்லபுத்தகங்களை அக்கினி யாருக்கு அர்பணம் பண்ணப்பாருங்கள்; ஆங்கிலேயர்கள் அந்நியர்கள் என்றும்,

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

குடி அரசு.

ஈரோடு 1932 மேமீ 22-உ

# இந்து முஸ்லிம் கலகம்.

—:0:—

மொகரம் பண்டிகையை முன்னிட்டு சென்ற 14—5—32 முதல் பம்பாயில் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் கடுமையான கலகம் நடைபெற்று வருகின்றது. கல்கத்தாவிலும் இக்கலகம் தலைகாட்டத்தொடங்கி விட்டது. எங்கும் ஒற்றுமை சகோதரத்துவம், சமரசம், சீர்திருத்தம் என்று பேசப்பட்டு வரும் இக்காலத்தில் கேவலம் மதத்தையும், ஜாதியையும், முன்னிட்டு இவ்வாறு கலகம் விளைவித்துக்கொள்ளுவதாக உலகத்தார் கருதும்படி நடந்துகொள்ளுவதைவிட நமது நாட்டிற்கு மானங்கெட்ட தன்மை வேறொன்றுமேயில்லை யென்பதை எந்த இந்தியரும் வெட்கத்தோடு ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும்.

கலகம் உண்டானதற்கு மூலகாரணம் சிறுபிள்ளைகள் ஆரம்பித்த சில காரியங்கள் என்றே பத்திரிகைகளில் சுட்டிக்காட்டப்படுகின்றது. சில முஸ்லிம் சிறுவர்கள் இந்துக்கள் வசிக்கும் இடங்களுக்குச்சென்று யாசகம் கேட்டார்களாம். இந்துக்கள் யாசகம் கொடுக்க மறுத்தார்களாம். இவ்வாறு யாசகம் கொடுக்க மறுத்தவர்களையும் வற்புறுத்திக் கேட்கவே அவர்கள் கோபங்கொண்டு தமது வேலைக்காரர்களைக்கொண்டு அச்சிறுவர்களைத் துன்புறுத்தினார்களாம். இதைக்கேள்வியுற்ற முஸ்லிம்கள் உடனே கூட்டமாகச்சேர்ந்துவந்து இந்துக்களுடன் கலகம் புரிந்தார்களாம். இதன்பின்பே கலகம் முற்றிவிட்டதாம். இதுவே பத்திரிகைகளில் காணப்படும் கலகத்திற்குக்காரணமான செய்தியாகும்.

இந்த அற்பகாரணத்தால் கலகமுண்டு நூற்றுக்கணக்கான மக்கள் உயிர்துறக்கவும், ஆயிரக்கணக்கானவர்கள் அடிபடவும், காயப்படவும், சொத்து சுதந்திரங்களை இழக்கவும், உயிருக்கு அஞ்சவும் நேர்ந்ததென்றால் இதைவிட நமது தேசத்திற்கு அவமானம் வேறு என்னவேண்டும்? அபலைகளான பெண்மக்களும் குழந்தைகளும், காலிகளால் தாக்கப்படுகின்றனர். கடைகளும் வீடுகளும் தாராளமாக சூறையாடப்படுகின்றன. இந்துக்களுக்குச் சொந்தமான இடங்களும், முஸ்லிம்களுக்குச் சொந்தமான இடங்களும் தாராளமாக நெருப்புக்கு இரையாக்கப்படுகின்றன. இக்கலகத்தில் இந்துக்கள் பக்கம்தான் அதிகச்சேதமென்றோ, அல்லது முஸ்லிம்கள் பக்கம்தான் அதிகச்சேதமென்றோ கூறுவதற்கில்லை. கலகம் என்று ஏற்பட்டால் இரு பக்கத்திலும் கொலைகளும், அடிகளும், கொள்ளைகளும் நடந்துதான் தீரும்.

இவ்வாறு அடிக்கடி இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும்கலகம் உண்டாவதற்குக்காரணம் எப்பொழுதும்இவ்விரு சமூகத்தாருக்குள்ளும்இருந்துவரும் அவநம்பிக்கையேயாகும். முதலில் இந்த அவநம்பிக்கையைப் போக்கி இருசமூகத்தாருக்குள்ளும் ஒற்றுமையுணர்ச்சியை ஏற்படுத்த முயற்சிசெய்யாமல் "எங்கள்நாட்டில் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாகிவிட்டோம்; எங்களுக்குள் சாதிச்சண்டையில்லை, மதச்சண்டையில்லை, சுயராஜ்யம் கொடுப்பதுதான் தாமதம்; இப்பொழுதே சுயராஜ்யம் கொடுத்துவிட்டால் கொஞ்சம் நஞ்சம் உள்ள மனப்பிணக்குகளும் ஒழிந்துவிடும்" என்று தேசியவேஷக்காரர்கள் கூச்சலிடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது?

இப்பொழுது பம்பாயில் ஏற்பட்டகலகத்திற்கு காரணம் சிறுபிள்ளைகள் செய்த முரட்டுத்தனமான விளையாட்டுக்காரியங்களும், அவைகளுக்குமேல் சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொண்ட இந்துக்களின் அவசரப்பட்ட ஆத்திரமான காரியமுமே மூலகாரணம் என்று கூறப்பட்டாலும், மதப்பிடிவாதம் என்று சொல்லப்பட்டாலும் உண்மையில் கலகம்பெருகி ஓங்கியதற்குக் காரணம் 'அரசியல்' என்றுதான் நாம் அபிப்பிராயப்படுகின்றோம்.

முஸ்லிம் பொது ஜனங்களும் பொது ஜனங்களால் மதிக்கப்படும் தலைவர்களும் காங்கிரசையோ சட்டமறுப்பையோ சத்தியாக்கிரகத்தையோ ஆதரிக்கவில்லையென்பது உலகறிந்தவிஷயம், அன்றியும் திரு. காந்தியார் வட்டமேஜைமகாநாட்டிற்குச்சென்று வந்தபின், திரு. காந்தியும் காங்கிரசும் அரசியலில் முஸ்லிம்களின் கோரிக்கைகளை ஒப்புக்கொள்ள முடியாதென்பதை பகிரங்கமாகக்காட்டிக்கொண்டபின், முஸ்லிம்கள்காங்கிரசை "இந்துமகாசபையின் அப்பன்" என்றேதீர்மானித்துவிட்டார்கள். ஆகவேகாங்கிரசின்மீது கொள்ளும் பகைமையை அதை ஆதரிப்போர் பாலும் கொள்ளத்தொடங்கிவிட்டார்கள். இதைப்போலவே காங்கிரஸ் அபிமானங்கொண்ட இந்துக்கள், முஸ்லிம்கள் சட்டமறுப்பை ஆதரிக்கவில்லையென்பதற்காகவும் முஸ்லிம் பொது ஜனங்களும் அவர்களின் தலைவர்களான மௌலானா ஷௌக்கத்அலி போன்றவர்களும் காங்கிரசையும் அதன் காரியங்களையும் வெளிப்படையாகக்கண்டித்து எதிர்க்கின்றார்கள் என்பதற்காகவும், முஸ்லிம்களின்மேல் உள்ளூரவெறுப்பும் ஆத்திரமும் கொண்டிருந்தார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. இதனாலேயே 'வேண்டாத பெண்டாட்டி கால்பட்டாலும் குற்றம் கைபட்டாலும் குற்றம்' என்பதுபோலச்சிறு பிள்ளைகள் யாசகம் கேட்ட அற்பகாரணத்தை முன்னிட்டுக்கலகம் உண்டாகிவிட்டதென்று கூறுவதில் சிறிதும் தவறு கிடையாது. இதுவே இந்து முஸ்லிம்கலகம் வலுப்பதற்குக்காரணம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்து முஸ்லிம் கலகத்திற்கு அரசியல் காரணமில்லையென்றும், சில பொறுப்பற்றவர்களும் வகுப்புச்சண்டை மூட்டுகின்றவர்களுமே கலகத்திற்குக்காரணம் என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால்ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்திப்பார்க்க வேண்டுகிறோம். இந்தியாவில் அரசியல்சீர்திருத்தமும், அதிகப்படியான அரசியல் சீர்திருத்தம் வேண்டும் என்னும் கிளர்ச்சியும் ஏற்படுவதற்கு முன் இப்பொழுது நடப்பதுபோல இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அடிக்கடி பெரும் கலகங்கள் நடந்தது உண்டா என்று கேட்கிறோம். இம்மாதிரியான கலகங்கள், அரசியல் சீர்திருத்தமும், அதிகப்படியான அரசியல் சீர்திருத்தம் வேண்டுமென்னும் கிளர்ச்சியும் ஏற்படுவதற்கு முன் இல்லை யென்பது உண்மை. ஆகவே இதற்கு முன்னில்லாமல் இப்பொழுது சில ஆண்டுகளாக ஆரம்பித்து அதிகப்பட்டு வரும் இக்கலகங்களுக்குக் காரணம் அரசியலா? அல்லவா?

இருசமூகத்தாரிடமுமிருந்து வரும் இத்தகைய விரோதமனப்பான்மை நீங்கி இந்து முஸ்லிம் ஒற்றுமையுண்டாவதற்குத் தான் வழியுண்டா என்று பார்த்தால் சமீபத்தில் ஏற்படுவதற்கு வழியில்லையென்றுதான் கூறவேண்டும். பல வகுப்புகளும், பல மதங்களும் உள்ள ஒரு நாட்டில் அரசியல் கிளர்ச்சி அதிகமாக அதிகமாக வகுப்பு மதக்கலகங்களும் அதிகப்பட்டுக்கொண்டு தான் இருக்கக்கூடும். ஆகையால் வகுப்பு வித்தியாசங்களையும், மதக்கோட்பாடுகளையும் ஒழித்தால் அன்றிக் கலகத்தை ஒழிக்கவாவது, அரசியலை நன்றாக நடத்தவாவது, விரும்பும் அரசியல் சீர்திருத்தங்களைப் பெறவாவது முடியாது என்பது நிச்சயம். ஆதலால் நமது நாட்டில் இந்துக்கள் பழய இந்துக்களாகவே இருக்கும் வரையிலும், முஸ்லிம்கள் பழய முஸ்லிம்களாகவே இருக்கின்ற வரையிலும் இருசமூகத்திற்குள்ளும் ஒற்றுமையுண்டாகப் போவதேயில்லை.

இந்து சமூகத்திலும் முஸ்லிம் சமூகத்திலும் மாறுதலை உண்டாக்கினால் தான் இருசமூகத்திற்கும் ஒற்றுமையுண்டாக முடியும். இரு சமூகத்தினருடைய பழக்க வழக்கங்களிலும், மனப்பான்மைகளிலும் மாறுதலை உண்டாக்கப்பாடுபடுவதே உண்மையானதேசவூழியமாகும். ஆனால்தேசியத்தில் ஈடுபட்டிருக்கும், எந்த ஸ்தாபனமும், எந்த மனிதர்களும் இதற்காகப் பாடுபடக் கொஞ்சமும் கவலையெடுத்துக்கொள்ளவேயில்லை யென்பது உண்மை. இதற்கு மாறாக, இருசமூகத்தலைவர்களும்; மத விஷயத்திலும், வகுப்பு விஷயத்திலும் இருசமூகத்தாருக்குள்ளும், மூடநம்பிக்கைகளையும், பிடிவாதத்தையும் அதிகப்படுத்தி வருகிறார்கள் என்று தான் கூற வேண்டியிருக்கிறது. இப்படியானால் எப்பொழுது தான் இருவகுப்பினருக்குள்ளும் சமரச உணர்ச்சி உண்டாக முடியும் என்று யோசனைசெய்து பாருங்கள்!

அன்றியும். சுலபமாக இந்து முஸ்லிம் கலகம் உண்டாவதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது. என்று நாம்நினைக்கின்றோம் சாதாரணமாக ஓடுகின்ற ஒருவனை ஓட ஓட விரட்டுவதே உலகஇயல்பு. எவ்வளவு அடித்தாலும் எதிர்க்க முடியாமல் தாங்கிக்கொள்ளுகின்ற ஒருவனை அடிக்கின்றவன் பயமில்லாமல் அடிப்பது தான் இயல்பு. 'நாம் விரட்டினால் நம்மை எதிர்த்து விரட்டுவான்' என்ற பயமிருந்தால், 'நாம் அடித்தால் நம்மையும்திருப்பி அடிப்பான்' என்றஅச்சமிருந்தால், விரட்டஎண்ணுகின்றவனும் அடிக்க நினைக்கின்றவனும், நினைத்தவு

டன் விரட்டவோ, அடிக்கவோ, துணிய மாட்டான் என்பது உறுதி. இந்த முறையில் இந்துக்களின் நிலைமையையும், முஸ்லிம்களின் நிலைமையையும் எடுத்துக் கொண்டால், இந்துக்கள் சமூகம் ஜாதிமத விஷயங்களில் நெல்லிக்காய் மூட்டைகளாய் இருப்பதனால், ஒற்றுமையோடு எதிர்க்கின்ற கூட்டத்தைக் கண்டால் முதலில் பயந்து ஓடக்கூடிய நிலையிலும், அடிபடக்கூடிய நிலையிலுமே இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. இக்காரணத்தினால் தான் முஸ்லிம்கள் சிறுபான்மையினராயிருந்தாலும் அஞ்சாமல் எதிர்க்கவும் இந்துக்கள் முதலில் யோசனையில்லாமல் கலகம் உண்டாவதற்குக் காரணமாயிருந்து விட்டுப் பிறகு அடிபட்டு ஓடவும் நேருகின்றது. இதற்கிடையில், கலகக்காரர்களும், கொள்ளைக்காரர்களும் புகுந்து கலகத்தை அதிகப்படுத்திப் பொருள்களைக் கொள்ளையடிக்கின்றார்கள்.

ஆகவே, ஒருவன் அடிப்பதை ஒருவன் பொறுத்துக் கொண்டிருப்பது, அல்லது ஒருவன்விரட்டுவதைக்கண்டு ஒருவன் பயந்து கொண்டு ஓடுவது என்றநிலை இருக்கும் வரையிலும் இது மாதிரியான வகுப்புக் கலகங்களும் மதச்சண்டைகளும் இருந்து தான் தீரும் என்பதில் யாரும் சந்தேகமேபடவேண்டியதில்லை.

ஆனால், திரு காந்தியின்—காங்கிரசின் ஆதிக்கம் ஏற்பட்டபின் இந்த நிலை மாறி, கலகத்தை எதிர்த்து நின்று அடக்கும் சக்தி உண்டாவதற்கு வழியேயில்லாமல் போய் விட்டது. திருகாந்தியின் உபதேசமும், காங்கிரசின் பிரசாரமும், “சத்தியாக்கிரகம் பண்ணுங்கள்! தடியடிவாங்குங்கள்! எவ்வளவு அடித்தாலும் பட்டுக் கொள்ளுங்கள்! ஆத்மசக்தி தான் பெரிது! ஆத்மசக்தியினால் எதிரிகளை வெற்றி கொள்ளுங்கள்” என்று கோழைத்தனத்தை ஊட்டிக் கொண்டு வருகின்றது. இந்தக் கோழைத்தனமான பிரசாரம் நடைபெறுகின்ற வரையிலும், இதைமக்கள் பின் பற்றிக்கொண்டு அடிபடுகின்றவரையிலும், எந்த வகுப்பினரானாலும் சரி எந்த மதத்தினரானாலும்சரி, கலகம் நேரும்போது அடிபட்டு மானங் கெட்டுச் சாவ வேண்டியது தான்.

ஆகவே, இந்து முஸ்லிம் கலகத்திற்குக் காரணம் அரசியலும், மூடநம்பிக்கைகளும்' ஒரு சாராரின் கோழைத்தனமும் காரணமாயிருப்பதை உணராமலும், உணர்ந்து அவைகளை ஒழிக்க வழி தேடாமலும், இருந்து கொண்டு வீணாக அரசாங்கத்தின் மேல்பழி போடுவது எவ்வளவு ஒழுங்கான செய்கை யாகும்?

கலகம் நேர்ந்தபின், அதை அடக்க அரசாங்க அதிகாரிகள் சரியான முறைகளைக் கையாளவில்லை; பாராமுகமாக இருக்கிறார்கள், என்று தேசீய வாதிகளும் தேசீயப் பத்திரிகைகளும், கூச்சலிடுகிறார்கள். ஆனால் அரசாங்கத்தாருடைய அடக்குமுறைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும், கட்டுப் படாமல் சட்ட மறுப்புச் செய்யக் கற்றுக்கொடுத்தவர்கள் யார்? இந்தத் தேசியத்தலைவர்களும் பத்திரிக்கைகளும் அல்லவா? அரசாங்கத்திற்கு விரோதமாகக் காங்கிரஸ் காரர்கள் சட்டமறுப்பும் கலகமும் செய்துவது போலவே, இந்துக்கள் முஸ்லிம்களுக்கு விரோதமாகவும், முஸ்லிம்கள் இந்துக்களுக்கு விரோதமாகவும் கலகம் புரிகின்றார்கள். சட்ட மறுப்புக்காரர்கள் அரசாங்கத்தாருடைய தடியடிகளையும், பிரம்படிகளையும், கடுமையான தண்டனைகளையும் மீறிக் கலகம் பண்ணுவது போலவே, இப்பொழுது இந்துக்களும், முஸ்லிம்களும் அரசாங்க அதிகாரிகளின் அடக்குமுறைகளுக்கும் அடங்காமல் கலகம் பண்ணிக்கொள்ளுகிறார்கள். ஆகவே இந்தக் குற்றத்திற்கும் அரசியல் கிளர்ச்சியே காரணம் என்பதை யார்? மறுக்கமுடியும்?

அன்றியும் இந்தஇந்துமுஸ்லிம் கலகம் நடந்த காலத்தில், அந்த பம்பாய் நகரத்திலேயே போலீஸ் டாபீஸ்களுக்குத் தீ யிடுவதும், தபால் பெட்டிகளுக்குத் தீயிடுவதும் ஆகிய காரியங்களும் நடந்திருக்கின்றன. இதைக்கொண்டே இக்கலகம் சட்ட மறுப்புக் காரர் களால் உண்டானதா? அல்லவா? என்பதை எளிதில் தீர்மானிக்கலாம்.

ஆகவே இனியாவது உண்மையில் இந்து முஸ்லிம் ஒற்றுமையுண்டாக வேண்டுமானால், இரு வகுப்பினரிடமும் உள்ள மூடநம்பிக்கைகளையும் முரட்டுப்பிடிவாதங்களையும் ஒழிப்பதும், அரசியலில் முஸ்லிம்கள்விரும்பும்நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற தேசீயவாதிகள் சம்மதிப்பதும், இந்துக்கள் கோழைகளாயில்லாமல் முஸ்லீம்களைப்போல் ஒற்றுமையாகவும், தைரியமாகவும் இருக்கும்படி செய்வதும், பொது ஜனங்களிடம் சட்டத்தை மீறுவது, கலகம்பண்ணுவது என்ற எண்ணம் உண்டாகாமல் இருக்கச் செய்வதும் ஆகிய காரியங்களாலேயே முடியுமென்று கூறுகிறோம்.

இதை விட்டுவிட்டு இப்பொழுதே வெள்ளைக்காரர்கள் நமது நாட்டைவிட்டு ஓடிவிடவேண்டும் என்று பிரசாரம் பண்ணுவதும், இன்றைக்கே பூரண சுயேச்சை கொடுத்து விட்டால் வகுப்புச்சச்சரவுகள் ஒழிந்து சமரசம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லுவதும் வீண் என்பதையும், அதனால் ஒருபலனும் உண்டாகப்போவதில்லை என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

---

## எதிரிகளின் விஷமப்பிரசாரம்.

—:0:—

நமது இயக்கத்தோழர்களான திரு. சௌந்தரபாண்டியன் அவர்களும், திரு. வி. வி. ராமசாமி அவர்களும், திரு முருகப்பர் அவர்களும், திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதன்அவர்களும், திரு. டி. வி. சோமசுந்தரம் அவர்களும், “சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை வரையறுத்து ரிஜிஸ்டர் செய்யமுடியாதிருப்பதனாலும், பலரும் தங்கள் தங்கள்விருப்பப்படி சங்கத்தின் அனுமதியின்றி நடந்துகொள்ளுவதாலும், இயக்க நிர்வாகக்கமிட்டியினின்றும்நீங்கிக்கொள்ளலாமா” என்று யோசனைசெய்ததாகவும், முடிவை நமது மாகாணச்சங்கத்தலைவர் திரு. ஆர். கே. சண்முகம் அவர்கள் வரும் வரையிலும் ஒத்திவைத்திருப்பதாகவும், அதுவரையிலும் இயக்கத்தின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாமல் விலகியிருப்பதென்று தீர்மானித்திருப்பதாகவும் சண்டமாருதம் பத்திரிகையில் ஒரு அறிக்கை வெளிவந்தது.

அவ்வறிக்கை வெளிவந்தபின் திரு. டி. வி. சோமசுந்தரம் அவர்கள், தான் அவ்வறிக்கையில் சம்மந்தப்படவில்லையென்றும், தனக்கு அவ்வறிக்கையில் கூறியுள்ளவை யாதொன்றும் தெரியாதென்றும், அவ்வறிக்கையில் கண்ட விஷயங்களை தாம் ஒப்பவில்லையென்றும், அவ்வறிக்கையில் கையெழுத்து இடும்படி தன்னையாரும் கேட்கவில்லையென்றும் வெளியிட்டிருக்கிறார். மற்றவர்கள் நால்வரும் ‘சண்டமாருதத்தில்’ வெளிவந்த அவறிக்கைக்குப்பின் வேறொரு செய்தியும் வெளிப்படுத்தாததால் அவ்வறிக்கையின் அபிப்பிராயத்தை அவர்கள் ஒப்புக்கொள்ளுவதாகவே நாம் கருதவேண்டியிருக்கிறது.

ஆகவே நமது இயக்கத்தோழர்களான திரு. சௌந்திரபாண்டியன் அவர்களும், திரு. முருகப்பர் அவர்களும், திரு. வி. வி. ராமசாமி அவர்களும், திரு. கி. ஆ, பெ. விசுவநாதன் அவர்களும் இவ்வறிக்கையை வெளியிட்டதிலிருந்து நமது இயக்க அபிமானிகள் பலர் அவர்கள் இயக்கத்திலிருந்தே விலகிவிட்டதாக ஒருதப்பு அபிப்பிராயப்படுவதாக அறிகின்றோம். இதற்கு அனுசரணையாக நமது எதிரிகளும் சுயமரியாதை இயக்கத்திலிருந்து மேற்கண்ட தோழர்கள் விலகிவிட்டார்களென்றும், அதனால் சுயமரியாதை இயக்கத்தில் பிளவு உண்டாகிவிட்டதென்றும், இனி இயக்கம் அழிந்துவிடுமென்றும் விஷமப் பிரசாரம் பண்ண ஆரம்பித்துவிட்டார்கள்.

ஆனால் உண்மையில் மேற்கூறிய நான்கு தோழர்களும் நமது இயக்கத்திலிருந்து விலகவில்லையென்பதையும், விலகுவதற்குநினைக்கக்கூட இல்லையென்பதையும், இவர்கள் எந்தக்காலத்திலும் நமது இயக்கத்தைவிட்டு விலகக்கூடியவர்கள் அல்லவென்பதையும் சந்தேகமில்லாமல்எடுத்துக்காட்ட விரும்புகிறோம். இந்தநான்கு தோழர்களும் நமது இயக்கந்தோன்றிய நாள் முதல் இதில் ஈடுபட்டு யாருடைய தயவு தாட்சண்யங்களுக்கும் கட்டுப்படாமல் உழைத்து வருபவர்கள் என்பதை நாம் கூறுவது மிகையேயாகும். உண்மையில் இத்தோழர்கள் சுயநலங் கருதியவர்களாயிருந்தால் அவர்கள் நமக்கு எதிரிடையான இயக்கங்களில் சேர்ந்து சுலபமாக தேசாபிமானப்பட்டம் பெற்றிருக்கலாம். அப்படியில்லாமல் உண்மையான சுயமரியாதைக்காரர்களாகவும் இயக்கக்கொள்கைகள் முழுவதையும் மனப்பூர்வமாக நம்பி ஒப்புக்கொள்ளுகின்றவர்களாகவும், இருக்கும் காரணத்தால்தான் அவர்கள் இதுவரையிலும் நமது இயக்கத்திலிருந்து கொண்டு எதிரிகளின் மிரட்டுதல்களுக்கும் வசை மொழிகளுக்கும் அஞ்சாமல் உழைத்து வருகிறார்கள் என்பது நமது இயக்கத்தில் உள்ள மற்றதோழர்களுக்குத் தெரியாத செய்தியல்ல.

இத்தகைய உண்மையான சுயமரியாதைத் தோழர்களை, இயக்கத்திலிருந்து விலகி விட்டார்களென்று சிலர் செய்யும் 'பிரசாரம்

நமது இயக்கத்தின் மேல் உள்ள குரோத புத்தியினால் செய்யப்படும் பொய் பிரசாரமேயாகும் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், எதிரிகளின் கூற்றுக்கு ஆதாரமாக ஒரு வார்த்தையாவது ஒரு எழுத்தாவது காணப்படுகிறதா? என்று கேட்கின்றோம்.

அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் காணப்படுவது 'இயக்க நிர்வாகக் கமிட்டியிலிருந்து விலக்கிக்கொள்ளலாமா' என்று யோசித்ததாகவே காணப்படுகிறதேயொழிய இயக்கத்திலிருந்து விலகிக்கொள்வதாக அவர்கள் ஒரு பொழுதும் கருதியதில்லையென்று அறியலாம். ஆகையால் அவர்கள் வெளியிட்ட அறிக்கையைத்திரித்துக்கூறி தப்புப் பிரசாரம் செய்வதன் மூலம் மேற்கூறிய நமது இயக்கத்தோழர்களின்மேல் பழி சுமத்தும் பொறுப்பற்றவர்களின் வார்த்தைகளை யாரும் நம்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

எந்த இயக்கத்திலும் தலைவர்களுக்குள் மனவேற்றுமை ஏற்படுவதும், அதனால் வருத்தமடைவதும் சகஜம். அதனால் இயக்கத்தின்மேல் உண்மையான பற்றுடைய யாரும் நிலைரென்று இயக்கத்தைவிட்டுவிலகிவிடாமல், இயக்கத்தில் தாங்கள் வகித்திருக்கும் பொறுப்பான பதவிகளிலிருந்து ஒதுங்கி நிற்பதும், தங்கள் மனவேறுபாடு தீருகின்றவரையிலும், இயக்க நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாமலிருப்பதும் சிலசமயங்களில் நடைபெறக்கூடிய காரியங்கள்தான். இந்த முறையிலேயே நமது இயக்கத்தோழர்களுக்கும் சில விஷயங்களில் அபிப்பிராய பேதம் தோன்றி வருத்தமடைந்து நடவடிக்கைகளிலிருந்து மாத்திரம் தற்சமயம் விலகியிருக்கத்தீர்மானித்திருக்கிறார்கள் என்றுதான் நம்புகிறோம்.

இனி நமது இயக்கத்தோழர்களான மேற்கூறியவர்கள் நிர்வாகக்கமிட்டியிலிருந்து விலகயோசித்ததற்கு தாங்கள் கூறியகாரணங்களை நிவர்த்தித்து இயக்கத்தைப் பலப்படுத்துவதற்கு இச்சமயத்தில் தாங்களே உழைக்கவேண்டுமென்றும், நமது எதிரிகளின் விஷமப்பிரசாரத்திற்கு இடங்கொடாமல் இயக்க நடவடிக்கைகளில் கலந்துகொண்டு இயக்க வளர்ச்சிக்குப பாடுபடவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வெளி நாடுகளுக்குச்சென்றிருக்கும் தோழர்களான ஈ. வெ. ராமசாமி, ஆர். கே சண்முகம், எஸ் ராமநாதன் முதலியவர்கள் வந்தபின் மனவருத்தமடைந்திருக்கும் நமது இயக்கத்தோழர்கள் கூறும் குறைகளின் உண்மைகளை ஆராய்ந்து நிவர்த்திக்கப்பட்டு எல்லாத் தோழர்களுக்குள்ளும் ஒருமனப்பட்ட அபிப்பிராயமும் சமரசமும் உண்டாகுமென்பதிலும் இவர்கள் முன்னிலும் பன்மடங்கு உற்சாகத்துடன் நமது இயக்கவளர்ச்சிக்காக வேலை செய்வார்களென்பதிலும் ஐயமில்லை.

ஆகையால் நமது இயக்க அன்பர்கள் யாரும் தோழர்கள் சௌந்திரபாண்டியன் முருகப்பர், வி. வி. ராமசாமி கி. ஆ. பெ. விசுவநாதன் முதலியவர்களைப்பற்றி எதிரிகள் செய்யும் தப்புப் பிரசாரத்திற்கும் அவர்கள் இயக்கத்திலிருந்து விலகிவிட்டதாகக்கூறும் புரளிகளுக்கும் செவிசாய்க்காமலிருக்கும்படி வணக்கமாக எச்சரிக்கை செய்கின்றோம்.

## கோவை அருணாசலம் காலமானார்.

கோயம்புத்தூர் நகர பரிபாலன சபையின் உதவித் தலைவராகிய திரு அருணாசலஞ் செட்டியார் அவர்கள் திடீரென்று தமது 42 வது வயதில் காலஞ் சென்ற செய்தி கேட்டு ஆற்றொணாத் துயரடைகின்றோம். திரு, செட்டியார் அவர்கள், கோவையில் பொது ஜன உபகாரியாகவும், பொது ஜனங்களால் நன்கு மதிக்கப்பட்ட ஒரு உழைப்பாளராகவும்,இருந்து வந்தார் என்பதற்கு இவரை 7 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நகர பரிபாலன சபைஉதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்ததே போதிய சான்றாகும். நமது இயக்கத்தில் அளவு கடந்த ஆர்வமும், நம்பிக்கையும் உடையவராயிருந்து வந்ததோடு, நமது இயக்க வளர்ச்சியிலும் கருத்துடையவராக இருந்து வந்தார். அன்றியும், இந்திய வர்த்தக சபைக் காரியதரிசியாகவும், பல பாங்குகளில் டைரக்டராகவும், இருந்து இவர் செய்த பொது ஊழியம் பலவாகும். இத்தகைய பொது ஜன உழைப்பாளர் ஒருவர் காலஞ் சென்றது சிறப்பாக கோவை நகரத்திற்கும், வர்த்தக உலகத்திற்கும் நமது இயக்கத்திற்கும் ஒரு பெரிய நஷ்டம் என்பதை நினைக்கும் போது யார் தான் வருந்தாமல் இருக்க முடியும். இவர் காலஞ் சென்றதினால் அளவற்ற துக்கத்தில் ஆழ்ந்திருக்கும், அவருடைய குடும்பத்தினர்க்கும், உறவினர்களுக்கும், தோழர்களுக்கும் நமது துயரத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## விபினசந்திர பாலர் மரணம்.

பழய, சிறந்த தேச ஊழியரான, திரு. விபினசந்திர பாலர் அவர்கள் 20—5—32-ல் தமது 76 வது வயதில் கல்கத்தாவில் காலமானார்.

(தந்தி.)

## நாகரிக, மாற்றம்.

### சீர் திருத்தக்காரர்களே ஜாக்கிரதை!

லண்டனிலுள்ள பொருளாதார கல்விச் சாலையில் அறிவாளியான ஸ்ரீ எச். ஜி. வெல்ஸ் என்பவர் சமீபத்தில் ஓர் அரிய பிரசங்கம் செய்தார். அதன் சாரம் பின் வருமாறு;—இவ் உலகத்தில் நாகரிகமானது வர வர அழிந்து வருகிறது. இன்று இங்குள்ள பல இளைஞர்களும், எதிர்காலத்தில் பயங்கரமான கட்டளைகளுக்கு உட்படும்படி நேரக் கூடும். நீங்கள் கடன்பட்டு மாண்டு போகநேரலாம்; அங்கஹீனர்களாகிக்கஷ்டப் படநேரலாம்; சித்திரவதை, பட்டினிபோன்ற பல கஷ்டங்களுக்கும் ஆளாகி அகால மரணமடையும்படி நேரலாம். ஆனால், ஒன்று மாத்திரம் நிச்சயம். அதாவது உங்களுக்குமிகப்பெரிய கஷ்டங்கள் தான்நேருமே யன்றி, நீங்கள் அடியோடுஅழிந்துபோய்விடமாட்டீர்கள். தற்போது உலகம் சின்னபின்னமாகி வந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு வாரமும் புதியதுன்பங்களும், கஷ்டங்களும், ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின்றன். இந்த அழிவின் அந்தம எவ்விதமென்பதை பற்றிஇப்போதுநம்மால்எதுவும் கூற முடியாது. முதலாளிகள்முறையான தொழிந்துவருகிறது. இதற்கானஅறிகுறிகள் எங்கும் காணப்படுகின்றன. பொருளாதாரநிலைமையால் பயனேற்படாமல் போய்விட்டது. மானிடர் வாழ்க்கைக்கு வேண்டிய சாமக்கிரியைகள் மிகவும் அதிகமாக உற்பத்தியாகியுள்ள இச்சமயத்தில் கூட உலக மக்களில்பாதிப்பேர் பஞ்சத்தினாலும், பட்டினியாலும் கஷ்டப்படுவது ஓர் ஆச்சரிமான விஷயமேயாகும்.

மானிடர் வாழ்க்கைக்கே மகத்தான துன்பத்தைக்கொடுக்கக்கூடிய இத்தகைய கஷ்டங்களேற்பட்டு வருகிறதெனினும், அவைகளைத் தடுக்க யாதொரு முயற்சியும் நடைபெறவில்லை. பணத் தட்டைப்போக்கி, நாணயநிலைமையை சீர்படுத்துவதற்கான சிறந்த ஸ்தாபனங்கள் இராததே அத்தகைய நிலைமைக்குக்காரணமாகும் நவீன நாகரிக அபிவிருத்திக்கேற்றவாறு நமது பொருளாதார சமூக வாழ்க்கையானதுமுன்னேற்றமடையவில்லை. இனி ஏற்படப்போகும் உலகப் புரட்சிக்கும் அதுதான் காரணம் எனினும், மேற்கூறியகஷ்டங்களாகிய பிரளயம் நம்மை சூழ்ந்துகொண்டாலும்நாம் தைரியத்தைக்கைவிடாது அதிலிருந்து மீண்டும்வரமுயற்சிக்கவேண்டும். அவ்விதம் செய்யும்பட்சத்தில், இப்போதுள்ளநாகரிகத்தைக்காப்பாற்ற நாம் கைக்கொள்ளும் முயற்சி பயன்பெறாவிடினும்,இனி இதைக்காட்டிலும் சிறந்த ஓர் நாகரிக வாழ்க்கைக்கு அஸ்திவாரம் அமைத்தோமென்ற ஆறுதலாவது நமக்கு இருக்கும்.

## முத்துப்பேட்டை யூனியன் போர்டு தேர்தல்.

இந்நகர் யூனியன் போர்டு தேர்தல் சென்ற 9-5-32ல் நடைபெற்றது. அதுபோது நமது இயக்கத்தோழரும் ஏழைகளின் பங்காளருமானதிரு.மா. தருமலிங்கம் அவர்கள் அநேக எதிர்ப்புக்கிடையில் இந்நகர் 14வது வார்டுக்கு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்போது இப்போர்டின் கூட்டத்தில் பேட்டை சுயமரியாதைச்சிங்கம் வீற்றிருப்பது ஏழை மக்களின் எதிர்கால நிலைக்கு நன்மையளிக்குமென நம்புகிறோம். என் திரு. எம். என். கோவிந்தசாமி எழுதுகிறார்.

## ஈரோடு எங் பாய்ஸ் யூனியன் கால் பந்து விளையாட்டு.

ஈரோடு எங் பாய்ஸ் யூனியன் சார்பில் 1932ஹு ஜூன் மாதம் முதல் வாரத்தில் கால்பந்து (Sixes) பந்தய விளையாட்டு ஒன்று நடைபெறும், இதற்கு நமது மாகாணம் முழுவதிலுமிருந்து வரலாம். டீம் ஒன்றுக்கு 3 ரூபாய் பிரவேசக்கட்டணம் அனுப்பவேண்டும். 31-5-32க்குள் பணமும், விண்ணப்பமும் அனுப்பவேண்டும். ஷை தேதிக்குப் பிறகு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா. இது சம்பந்தமாக விஷயம் தெரிந்துகொள்ள வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

*Tournament Secretary*
E. K. Abdulkarim Sahib,
Salt Merchant, Erode.

## மூன்று மகாநாடுகள்.

தங்கவயல் சாம்பியன் ரீப்சில்
21, 22, 23-5-32ம் நாட்களில் கூடும்.

---

### நான்காவது தென்னிந்திய பௌத்த மகாநாடு.

(21—5—32 சனிக்கிழமை)

தலைவர்.

புரோபசர் பி. லட்சுமிநரசு அவர்கள் பி. ஏ.

உபந்யாசகர்கள்.

தோழர் ஜி. அப்பாதுரையார் அவர்கள்
,, கே. பிரம்மசாரி அவர்கள் பி. ஏ. எல். டி.
,, எஸ். குருசாமி அவர்கள் பி. ஏ.
,, ஜி. குஞ்சிதம் அவர்கள் பி. ஏ. எல். டி.

---

### முதலாவது சுயமரியாதை மகாநாடு.

(22-5-32 ஞாயிற்றுக்கிழமை)

தலைவர்.

தோழர் எஸ். குருசாமி அவர்கள் பி. ஏ.

உபந்யாசகர்கள்.

தோழர் எஸ். முனிசாமியார் அவர்கள்
,, ஜி. குஞ்சிதம் அவர்கள் பி. ஏ. எல். டி.
,, வி. பி. எஸ். மணியார் அவர்கள்
,, கே. வி. அழகர்சாமி அவர்கள்
,, அ. பொன்னம்பலனார் அவர்கள்
,, வி. பார்த்தசாரதி அவர்கள்

---

### மூன்றாவது ஆதிதிராவிடர் மகாநாடு.

(23-5-32 திங்கட்கிழமை)

தலைவர்.

தோழர் எ. பி. பெரியசாமிப்புலவர்

வரவேற்புக்கழகத்தலைவர்.

தோழர் கே. பிரமாச்சாரி அவர்கள் பி. ஏ. எல். டி.

உபந்யாசகர்கள்.

தோழர் வி. வி. டேவிட் பெருமாள் அவர்கள்
,, அநுமந்து அவர்கள்
,, ஜி. அப்பா துரையார் அவர்கள்
,, ஆர். டி. அய்யாக்கண்ணு மேஸ்திரியார் அவர்கள்

---

குறிப்பு:— சாம்பியன் ரீப்ஸ் பௌத்த சங்கத்தின் முகப்பில் அமைக்கப்பட்டுள்ள பந்தலின்கண் ஷை மூன்று மகாநாடுகளும் 21, 22, 23—5—32 ஆகிய தேதிகளில் நடைபெறும்.

வி. கே. ஆறுமுகம்,
பொதுக்காரியதரிசி.

## கோட்டாறு
# சுயமரியாதைவாசகசாலை
## மூன்றாவது ஆண்டு விழா.

இவ்வூர் சமரச வீதியில் அமைக்கப் பட்டிருக்கும் சுயமரியாதை வாசிப்புச் சாலையின் மூன்றாவதாண்டு விழா ஏற்கனவே அறிக்கப்பட்டிருந்தபடி 13-5-32 ந் தேதி யன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது.

12-ந்தேதி மாலையில் திருச்சியிலிருந்து திருவாளர்களான ராமசுப்பிரமணியம் எஸ். நீலாவதி அம்மையார் ஆகியவர்களும் ஈரோட்டிலிருந்து அன்றிரவு திருவாளர்களான கே. வி. அழகர்சாமி, பொன்னம்பலனார் ஆகியவர்களும் இங்கு வந்து சேர்ந்தார்கள் குறிப்பிட்ட படி காலை 9-30 மணி தலைவர் ஏ. குணமணி எம். ஏ. பி. எல். அவர்களை பாண்டு வாத்திய கோஷத்துடன் சௌந்தர விலாஸ் கட்டடத்திற்கு அழைத்து வரப்பட்டு அங்கிருந்து உபந்யாசகர்களுடன் ஊர்வலம் ஆண்டுவிழா பந்தலுக்கு வந்து சேர்ந்தது. பெண்களுக்காகத்தனியிடம்அமைக்கப்பட்டிருந்தது. 2000 ஜனங்கள் கூடியிருந்தார்கள். தலைவர் தேர்தல், அறிக்கை படித்தல் ஆகியவை நிகழ்ந்த பின் தலைவர் தமது முகவுரைப் பிரசங்கத்தை சுமார் அரைமணி நேரம் பேசினார்கள் அவற்றில் நாட்டிலிருக்கும் அறியாமை நீக்குவதற்கும், மனிதர்கள் முன்னேற்றம் அடைவதற்கும் முற்கால தற்கால பழக்க வழக்கங்களால் ஏற்பட்டிருக்கிற நன்மை தின்மைகளையும் விளக்கிப் பேசினார்கள்.

பின்பு திருவாளர் ராமசுப்பிரமணியம் அவர்கள் "மத உலகில் மனிதன்" என்னும் விஷயம் பற்றி 1-30மணி நேரம் விளக்கமாகப் பேசினார்கள் அவற்றில் இந்து மதம் தற்சமயம் எவ்வாறிருக்கிறதென்றும், பகவத் கீதை நாடகத்தில் நடத்தப் பெறும் விபசாரப் பிரசாரத்தைக் கண்டித்தும், மக்கள் ஏமாந்து கொண்டே யிருப்பதற்கு முக்கிய காரண மென்ன வென்பதையும், கடவுள் பெயரால் கொட்டப்படும் பணத்தை மக்களுக்கு கல்வி வசதி, ரோடு, தண்ணீர், விளக்கு, வைத்திய சாலை, ஆகிய வசதிகளுக்குச்செலவிடுதல் மிகப் பயனை அளிக்குமென்றும், கோவிலுக்கு லட்சக்கணக்காகச்செலவிடும் பொருள் பணக்காரர் உதவினாலும் உண்மையிலேயே அது ஏழைகளின் இரத்தத்தைப் பிழிந்து சேர்க்கப் பட்ட பொருள் என்றும், தீண்டாமையின் பேரால் மனிதனை மனிதன் இழிவு படுத்திக் கொண்டிருப்பது மனிதத் தன்மைக்குக் கீழ்ப் பட்ட செயல் என்றும், கருடபுராண ஏமாற்றங்களையும், விதவைகளின் பரிதாப நிலையையும் அவர்களுக்கு மறு விவாகம் செய்விக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும், அரசமரத்திற்கும் வேப்ப மரத்திற்கும் கல்யாணம் செய்வதென்றால் அது அளவிட முடியாத மூடத்தனம் என்றும் இன்னும் பல விஷயங்களைப்பல உதாரணங்களுடன் பேசினார்.

பகல் 12 மணியானதும் பகல் போஜனத்திற்கு சென்று மீண்டும் மாலை 3-3( மணிக்குக் கூட்டம்

---

## திருப்பூர்
## டி. மு. கோர்ட்டு.

1932 ஞு I. A. No. 560 & 561
1932 ஞு O. S. No. 241.

பல்லடம் தாலூக்கா வீரபாண்டி கிராமம் கஸ்பாவிலிருக்கும் முத்துசாமிக்கவுண்டர் மகன் நல்லசாமிக்கவுண்டன் 1. ஷையூர் அமராவதி கவுண்டன் மகன் முத்துமல்லேகவுண்டன் 2. —வாதிகள் ஃ மனுதாரர்கள்.

ஷையூர் வெங்கிடாசலம் செட்டி மகன் ராமசாமி செட்டி 1. ஷையூர் குப்பஞ்செட்டி மகன் பெரிய தம்பி என்கிற அழகிரி செட்டி 2. —பிரதிவாதிகள்.

ஷை கெம்பரில் வாதிகள் தங்களை ஷை கிராமத்திலுள்ள கவுண்டர்களுக்கு பிரதிநிதியாக இருந்து வியாஜ்யத்தை நடத்த அனுமதி கொடுக்கவும், ஷை கிராமத்திலுள்ள தேவாங்க செட்டிமார்களுக்கு எல்லாம் ஷை 1—2 பிரதிவாதிகளை பிரதிநிதியாக சேர்த்துக் கொண்டும் ஷை யார்கள் பேரில் ஏற்படும் உத்திரவு எல்லா தேவாங்கு செட்டியார்களையும் கட்டுப் படுத்தும்படிக்கும் உத்திரவு செய்யவேணுமாயும் வாதிகள் மனுக்கள் செய்துகொண்டு அதுகளுக்கு நோட்டீஸ்வாய்தா 6-7-1932 ல் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு ஆக்ஷேபணையுள்ளவர்கள் எல்லாம் சமூகம் கோர்ட்டில் ஷை தேதியில் தெரிவித்துக்கொள்ளலாம் என்ற சங்கதி இதன்மூலியமாய் எல்லோருக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(Sd) N. கோபாலராவ்,
வாதிகள் வக்கீல்.

திருப்பூர் 17—5—32.

ஆரம்பமாகியது. மழை பெய்து கொண்டேயிருந்தாலும் ஏராளமான ஆடவரும், பெண்டிரும் மிக உற்சாகத்துடனே கூடியிருந்தார்கள். "புதுவை முரசு" ஆசிரியர் திரு. அ. பொன்னம்பலனார் அவர்கள் "தீண்டாமையின் விளைவு" என்பது பற்றி சுமார் ஒரு மணி நேரம் பேசினார்கள். அவற்றில் 7 கோடி மக்களை இன்னும் தாழ்த்தி வைத்துக் கொண்டிருப்போமானால் நாம் எதற்கும் தயாரானவர்கள் என்று சொல்லமுடியாதென்றும், ஒரு சமூகத்தார் பள்ளியை எட்டிப் பார்க்கவும், மற்றொரு சமூகத்தார் எட்டிப் பார்க்க முடியாமலும் இருப்பதற்குக் காரணம் தீண்டாமை தான் என்றும் பள்ளிக்கூடங்களில் பையன்களைக் கேள்வி கேட்கும் பொழுது பிராமணப்பையனாயிருந்து பதில் சொல்லத் தெரியாவிடில் அடுத்த பையனைக் கேட்கிறார். தாழ்ந்த வகுப்புப் பையனாயிருந்தால் உனக்கெல்லாம் படிப்பு வருமா பேசாமல் மாட்டுத் தோலைத் தின்று வீட்டிலிருந்து கொண்டு மண் வெட்டிப் பிழை என்றும் கூறப்படுகிறதென்றும், காந்தி தீண்டாமை போக வேண்டுமென்று சொல்வதற்கு அர்த்தமில்லை என்றும் காந்தி போற்றும் பகவத்கீதையில் பார்ப்பானை, பார்ப்பானாகவே இருக்கச் சொல்லுகிறது, பறையனை பறையனாகவே இருக்கச் சொல்லுகிறதுஎன்றும், சில வைதீகர்கள்பறையர்களைச் சுத்தமாக இல்லை, படிக்க வில்லை, என்று குறை கூறுகிறார்களே ஒழிய அவர்களை நன்கு படிக்குமாறு பள்ளிக்கூட வசதி செய்யப்பட்டிருக்கிறதா? குளிப்பதற்கு நல்ல நீர் நிலைகள் உதவப் பட்டிருக்கிறதா என்று உணருவதே இல்லை என்றும், மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலுள்ள லட்சக்கணக்கான நகைகளை வைசிராய் வந்து பார்த்துச்செல்லும் பொழுது இந்தியா ஏழை நாடு என்று எவ்விதம் எண்ணிக் கொள்ள முடியுமென்றும் தீண்டாமையைப் போக்க ஒவ்வொருவரும் உழைக்கவேண்டுமெனவும் பேசினார். பின்னர் திருமதி எஸ். நீலாவதி அம்மையார் அவர்கள் "அடிமை உலக விடுதலை" என்னும் விஷயம் பற்றி சுமார் 1-30 மணி நேரம் பேசினார்கள். பின்னர்திருவாளர் கே. வி. அழகர்சாமி அவர்கள் "ஜனநாயகமும், சுயமரியாதையும்" என்னும் விஷயம் பற்றி சுமார் 1-30 மணி நேரம் பேசினார்கள் இடையிடையே சிறுவர்களால் சுயமரியாதைப் பாட்டுக்கள் பாடப் பெற்றன. தலைவர் முடிவுரை கூறியதும் காரியதரிசியால் வந்தோபசாரம் கூறப்பட்டு இரவு 8-30 மணிக்கு கூட்டம் முடிவு பெற்றது. மறுநாள் காலை திருவாளர்களான ராமசுப்பிரமணியம் எஸ். நீலாவதி அம்மையார் ஆகியவர்கள் திருச்சிக்கும், அ. பொன்னம்பலனார்அவர்கள்மதுரைக்கும் கே. வி. அழகர்சாமி அவர்கள் ஈரோட்டிற்கும் புறப்பட்டார்கள்.

---

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆரியப்பார்ப்பனர்கள் அந்நியர்களல்லவென்றும் அறைந்து அலையும் அறிவிலிகளைச் சிறைச் சாலையில் அடைக்க முயலுங்கள்: கலப்புமணம், விதவா விவாகம் முதலிய வைகளை ஆதரியுங்கள்—செய்கையில் காட்டுங்கள்; பால்ய மணத்தைப் பறக்கவடியுங்கள்; பெண் களுக்குச் சமத்துவம் கொடுத்து வாழுங்கள்; அறிவிலிகளின் எதிர்ப்புகளுக்கு அஞ்சாதீர்கள்—சட்டை பண்ணாதீர்கள்; பிறர் ஒருவரைப்பற்றி 'மகாத்மா', 'தியாக மூர்த்தி' என இன்னும் இவை போன்றபுகழ் மொழிகளைக் கூறினால், நீங்களும் அவர்களோடு சேர்ந்து புகழ்ந்து விடாதீர்கள், அவர்கள் புகழும் (மகாத்மா) மனிதன் அப்புகழுக்கு உரியவர்தானோ என ஆராய்ந்தபின், அவரைப்பற்றி மதிப்புரை கொடுக்கப் பாருங்கள்; அப்பொழுது தான் நீங்கள் உண்மையில் உங்கள் சொந்த மூளைக்கு வேலை கொடுத்தவராவீர்கள்.

மேற் கூறியவைகளை என்று நீங்கள் (இளைஞர்கள்) செய்வீர்களோ, அன்றே நாம் உண்மை விடுதலையின்பம் அடைந்த வராவோம்; அன்றே நாம் தந்தை செய்து வைக்காதவைகளை மகன் செய்து வைப்பான் என்னும் பழமொழியைக் கண்கூடாய்க் காட்டியவராவோம் இளைஞர்களே! என்ன செய்யப்போகிறீர்கள்?

---

## மதிப்புரை.

ஓரியண்டல் கவர்ன் மெண்ட் செக்யூரட்டி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியின் 1931 ௵த்திய ரிப்போர்ட் ஒன்று வரப்பெற்றோம். புள்ளி விபரங்களோடு கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. அதிலிருந்து சென்ற ௵ 5 கோடிரூபாய்க்கு மேல் புதியபாலிசிகள் எடுத்துக் கொள்ளப்பட்டனவென்பதும், முந்திய ௵த்தைக் காட்டிலும் இவ்௵ 8 லட்சம் ரூபாய் பிரிமிய வருமானம் அதிகரித்திருக்கிறதென்பதும், வட்டி வருமானம் $4\frac{3}{4}$ லட்சம் உயர்ந்திருக்கிறதென்பதும் பாலிசிதாரர்களுக்கும், அவர்களது வார்சுகளுக்கும் சுமார் 86 லட்சம் ரூ. வரை கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதும் கணக்குகளிலிருந்து தெளிவாய் விளங்குகிறது. இதையெல்லாம் கூர்ந்து கவனிக்கும் போது கம்பெனிபல விதங்களிலும் முன்னேற்றமடைந்து வருகிற தென்பதை யேகாட்டுகிறது. தவிர செலவு விகிதம் குறைந்திருப்பது மிகவும் போற்றற் குறியதாகும்.

தமிழ் நாட்டினர்க்கு இக்கம்பெனியின் சேவையும் பலனும் கிடைக்கும் படி, தென்னாட்டில் முக்கிய நகராகிய திருச்சியில் ஒரு கிளைஆபீஸ் வைத்து நடத்தும்கம்பெனியின் நோக்கத்தை நாம் மெச்சுகிறோம். சுமார் 5, 6, வருஷங்களுக்கு முன்னர் தனியாய் வந்து இடை விடா உழைப்பினால் ஒரு ஆபீசையே ஸ்தாபித்தகாரியதரிசி அவர்களின் முயற்சியும், ஊக்கமும் மிகவும் பாராட்டற் குறியதாகும்.

## கலப்பு மணம்.

நெல்லூர் வாசியான திரு. இக செஞ்சையா நாயுடுவிற்கும், ஆதி ஆந்திரவகுப்பைச்சேர்ந்ததிருமதி பொட்டு லக்ஷிமிக்கும் 12-5-32ந் தேதி விவாகம் நடைபெற்றது. திரு சேஷகிரி ராவ் திருமணத்தை நடத்தி வைத்தார் அவ்வைபவத்திற்குப் பல பிரமுகர்கள் வந்திருந்தனர். பலர் பேசினார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.


# வெள்ளை வெட்டைக்கு

## சந்தனாதி மாத்திரை, பிரமேக நெய்

### சாப்பிட்ட 12 மணி நேரத்திற்குள் குணம் தெரியும்.

வெள்ளை வெட்டை வியாதிகள் எவ்வளவு நாள் சென்றதாயிருந்தாலும் சரி, பொருக்க முடியாத நீர் குத்தல், நீர்க்கடுப்பு, பிரமேகம், கல்லடைப்பு, சதை அடைப்பு, தாது நீரில் கலந்து வெளியாகுதல், நீர் விடுவதற்கு முன்னும் பின்னும் இந்திரியம் சொட்டு சொட்டாய் வெளிவருதல், ரெத்தவெட்டை, அஸ்திகாங்கை, எலும்புருக்கி சொப்பன ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், அஸ்திமேகம், இந்திரியப் பையில் ஏற்படும் ரணம், கொதிப்பு முதலிய நீர்த்தாரையிலுண்டாகும் சகல வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்யும்.

சந்தனாதி மாத்திரை, பிரமேக நெய் இரண்டும் சேர்ந்து விலை ரூ. 5—0—0. பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம், மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

---

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பகுளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

# சேலம் ஜில்லா சுயமரியாதை மகாநாடு.

## கோவை திரு. வெரிவாட செட்டியார் சொற்பொழிவு.

1932 மே 8உ நடைபெற்றசேலம் ஜில்லா சுயமரியாதைத் தொண்டர் மகாநாட்டில் பார்பனரல்லாதாரியக்க மாபெருந்தலைவர் காலஞ்சென்ற டாக்டர் டி. எம். நாயர் அவர்களின் உருவப்படத்திறப்புவிழா வாற்றிய கோவை உயர்திரு வி. வெரிவாட செட்டியார் அவர்களின் சொற்பொழிவு.

சகோதரிகளே! சகோதரர்களே! பார்ப்பனரல்லாதாரியக்க மாபெருந்தலைவர் காலஞ்சென்ற பெரியார் டாக்டர் டி. எம். நாயர் அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைக்கும் பெரும்பணியை எனக்கிட்ட உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியறிதலைத்தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### பார்ப்பனரல்லாதாரியக்கமும், சுயமரியாதை யியக்கமும்.

அரசியற்றுறையிலே பிற்போக்கடைந்த பார்ப்பனரல்லாதார் பெருங்குடிமக்களை முன்னேற்றுவிக்க காலஞ்சென்ற மாபெருந் தலைவர்களாய சர் பி· தியாகராயர், நாயர் இவர்களால் தோற்றுவிக்கப்பட்டு காலஞ்சென்ற பனகால் அரசர் அவர்களால் போற்றி வளர்க்கப்பட்ட நமது பார்ப்பனரல்லாதாரியக்கத்தின் துணைகொண்டு தோன்றியதாகும் நமது சுயமரியாதை இயக்கம். அரசியல் துறையிலே பார்ப்பனரல்லாதாரியக்கம் நம் மக்களை விழிப்படையச் செய்வது போல், சுயமரியாதையியக்கம், சமய சமூகத்துறையிலே நம் மக்களை விழிப்படையச் செய்தது எனச்சொல்வது மிகையாகாது. ஒரு நாடோ, அந்நாட்டு மக்களோ, முற்போக்கடைந்து விடுதலையடைய வேண்டுமாயின், அத்தேசத்துமக்கள் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினாலன்றி விடுதலை என்ற கூச்சல் கானலிற் பெய்தமழையேயாகும். உதாரணமாக காங்கிரஸ்மகாசபையானது சென்ற 45 ஆண்டுகளாக உழைத்து வந்தும் பார்பனரல்லாதாரியக்கம் சென்ற 16 ஆண்டுகளாக உழைத்து வந்தும் மக்கள் மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலையடையாததின் காரணம் பாமர மக்களிடையே செய்யப்பட்ட பிரசாரமானது நேரிய வழியிலே செய்யப்படவில்லை யென்பதே என் அபிப்பிராயமாகும்.

### கல்வி

இது போழ்து நம் நாட்டில் பரப்பப்பட்டுவரும் கல்வி முறையானது பெரும்பாலும் வயிற்றுப் பிழைப்புக்கு வழிகாட்டக் கூடும் என்ற நம்பிக்கையின் மீதும், ஆசையின்மீதும் கல்வி கற்கப்பட்டு வருகிறதே யல்லாது, மக்கள் அறியாமை நீங்கி, அறிவு வளர்ச்சிக்கான முறையில் கல்வி புகட்டப்பட வில்லை. அறியாமை நீங்கி அறிவு வளர்ச்சிக்கான துறையில் கல்வி புகட்டப்படவேண்டுமானால், கீழ்தரகக் கல்வியிலிருந்தே திருத்தப்பட்டு வரவேண்டுமென்று எண்ணுகிறேன். கல்வியின் மூலம் மூடப்பழக்க வழக்கங்கள் ஒழியவேண்டுமானால் முதலில் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் பாட புத்தகங்களைச் சீர் திருத்த வேண்டியது அவசியமாகும். சாதி வேற்றுமை, இயற்கைக்கு மாறான புராணக்கதைகள், தன்னம்பிக்கையை குறைத்து மூட நம்பிக்கையை உண்டாக்கக்கூடிய செய்கைகள் கோவில்களிலும், திருவிழாக்களிலும், சடங்குகளிலும், நம்பிக்கையுண்டாக்கக்கூடிய செய்கைகள் ஆகிய இவைகள் இல்லாத பாட புத்தகங்களைக் கொண்டே மாணவர்களைப் பகுத்தறிவுடையவர்களாக்க முடியும். ஆகையால் இவ்வகையில் நமதுஇயக்கமும், சீர்திருத்த வாதிகளும் முயற்சி செய்ய வேண்டுகிறேன். எளிதில் மூட நம்பிக்கைகள் ஒழிவதற்கு இதைத்தவிர வேறு ஒரு சிறந்த வழியில்லை யென்பதே எனது அபிப்பிராயமாகும்.

### மூடப்பழக்க வழக்கங்கள்.

தன்னம்பிக்கை யில்லாத யாரும் தான் நினைத்த காரியங்களில் வெற்றிபெறமுடியாது. உலகில் இதுவரையிலும் பலபக்கங்களிலு மிருந்து பல பெருங் காரியங்களை யெல்லாம் செய்து முடித்தவர்கள் அனைவரும் தன்னம் பிக்கையைத் துணையாகக் கொண்டவர்களே யென்பதைச் சரித்திர பூர்வமாக அறியலாம். இவ்வாறு ஒரு சிலர் தன்னம்பிக்கை யுடையவர்களாயிருந்து அரிய பெரிய காரியங்களிற் வெற்றி பெறவும், பெரும்பாலான மக்கள் சோம்பேரிகளாயிருந்து நினைத்த காரியங்கள் கை கூடாமல் வருந்தி யிருக்கவும் காரணம் மூட நம்பிக்கையேயாகும். முதலில் விதி, அதிர்ஷ்டம், ஜோதிடம், மந்திரம் முதலியவைகளைப் பற்றி ஆராய்து பார்த்தால் இவ்வுண்மை விளங்காமற்போகாது. விதி என்பதை நம்பிக்கொண்டிருக்கின்ற ஒரு மனிதன் தான் எந்தக் காரியத்தையும் தைரியத்தோடு செய்து நன்மை பெறுவதற்கில்லாமல் சோம்பேரியாகின்றான்.

அதிர்ஷ்டம் என்னும் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிக் கொண்டிருக்கிறவனும் தனது வாழ்க்கையின் நலத்திற்காக வேண்டிய காரியங்களைச்செய்து சுகமடைய முயற்சிக்காமல் நல்லதிர்ஷ்ட மிருந்தால் நன்மை கிடைக்கும் என்று நம்பிக்கொண்டு வாழ் நாள் முழுமையும் வீணாக்குகின்றான்.

சோதிட மென்பதை நம்புகின்றவன் தானே தனக்கு வசதியான நேரத்தில்தான் நினைத்த காரியத்தைச்செய்யத் துணியாமல் சோதிடக்காரனை யழைத்து சாதகத்தைக்காட்டி அவன் பணம் பறிப்பதற்காகச் சொல்லுகின்ற கிரகதோஷம் முதலியவைகளை நம்பி வீணாகப்பணத்தைச் செலவிடுகின்றான். கல்யாணம் முதலிய நன்மையான காரியங்களிலுங்கூட இந்த ஜோதிடம் வந்து குறுக்கிட்டுப்பல தீமைகளையும் உண்டாக்குகின்றது.

மந்திரம் என்கின்றதை நம்புகின்றவனும் தன்உடம்புக்கு வந்த வியாதியின் தன்மையைக்கூட அறியாமல் அதற்கான மருந்துமுதலியன உண்டு குணப்படுத்திக்கொள்ள முயலாமல் மந்திரவாதியையழைத்தும் பொருளைச்செலவு செய்து வியாதியை நீக்கிக் கொள்ள முயல்கின்றான். மந்திரத்தினால் மாங்காய் விழுமா என்று சாதாரணமாக யாரும் சொல்லும் வார்த்தையின் உண்மையை யறிந்தவர்கள் மந்திரத்தில் நம்பிக்கை வைப்பார்களா? ஆகையால் விதி, அதிர்ஷ்டம், ஜோதிடம், மந்திரம், முதலிய விஷயங்களில் பாமர மக்களுக்குள்ள மூட நம்பிக்கைகளை யொழித்து அவர்களை சிக்கனமாகவும், பகுத்தறிவுடையவர்களாகவும் வாழச்செய்யவேண்டுமென்பதே என் திடமான நம்பிக்கையாகும். ஸ்தல யாத்திரை போவதும், தீர்த்தமென்றும் புழுக்கள் நிறைந்த அசுத்த தண்ணீரில்மூழ்கித் தொத்து நோய்க்காளாகி இறந்துபட்டு அழிவதைக்கண்கூடாகக் கண்டும் தேர் திருவிழாக்களென்று பெரும்பொருட்செலவு செய்து கொண்டுபோய் அலைந்து திரிந்து அருமையான காலத்தை வீணாக்குவது அறிவுடையோர் செயலாகுமாவென்பதை ஆழ்ந்து சிந்தித்தால் உண்மை விளங்காமல் போகாது. பிள்ளைவரம் பெறப் போய் புருஷனைப்பறி கொடுத்தவர்களெத்தனைபேர், கடவுள் வரப்பிரசாதத்தால் பிள்ளை பிறந்ததென நம்பி காணிக்கை செலுத்த கடவுள் சந்நிதானம் சென்றயிடத்தில் காலராவினால் பிள்ளையைப்பறி கொடுத்து பெருந்துன்பத்திற்காளான மக்கள் எத்தனை, இவைகளெல்லாம் அறியாமையால் விளையும் கேடு என்பதற்கு ஐயமுண்டோ?

ஆதலால் அன்பர்களே பாமரமக்களிடையே இக்கொள்கைகளைப்பரப்புதற்கு ஆங்காங்கே நூல் நிலையங்கள் நிறுவி மக்கள் பகுத்தறிவு வளர்ச்சிக்கான நூல்கள்எழுதி வெளியிட்டு அபத்தப்புராண ஆபாசக்கொள்கைகளை மக்கள் மனத்தினின்று ஒழித்தற்கான பெரு முயற்சிகள் செய்ய வேண்டுகிறேன். தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும் என்ற பழமொழிப்படி இளமையிலேயே நமது பிள்ளைகளுக்கு அர்த்தமற்றதும் ஆபாசமானதுமான பொய்க்கதைகளைப் பாடமாக வைத்து அறிவீனர்களாக்காது அறிவுடையவர்களாகச்செய்ய அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்தமான பாடப்புத்தகங்கள் மூலம் போதிக்கப்பட்டாலொழிய மூடப்பழக்க வழங்கங்களை நம்மவர்களிடமிருந்து போக்குவது அரிது என்பது நீங்களறியாததல்ல. ஆதலின் அன்பர்களே! மெற்சொன்ன அரும்பெருங் குணங்களெல்லாம் ஒருங்கே வாய்ந்த மக்கள் அறிவு வளர்ச்சிக்கான துறையில் செய்யவேண்டியதை செய்ய முன்வரவேண்டுமாய் உங்களைக்கேட்டுக்கொண்டு நமது தலைவர் டாக்டர் டி. எம். நாயர் அவர்களின் உருவப்படத்தை அளவுகடந்த பெரு மகிழ்ச்சிப்பெருக்கோடு திறந்து வைக்கிறேன்.

---

# சாக்கோட்டையில் சுயமரியாதைத் திருமணம்.

சாக்கோட்டை எஸ். வீரப்பன் கிரகத்தில் 8-5-32ல் பகல் பத்து மணிக்கு திரு. சி. நாராயணசாமிக்கும், திருமதி ஜெகதம்பாளுக்கும் சுயமரியாதை முறைப்படி திரு. ஆர். சி. வெங்கட்டராமன் அவர்களால் திருமணம் நடத்தப்பட்டது. அதுசமயம் தோழர்களான கே. எஸ். சுப்பிரமணியம், நடராஜன், ஏ. குப்புசாமி, வி. சின்னத்தம்பி, சுப்பையா, கும்பகோணம் சுயமரியாதை வாலிப சங்கக்காரியதரிசி எஸ். சுப்பராயன், எம். பொன்னுசாமி இவர்களால் விரிவுரையாக யாவர் மனதிலும் பதியும் வண்ணம் புரோகிதத்தையும், மூட சடங்குகளையும் கண்டித்து சிக்கன முறைகளை கையாளும்படி உபந்யாசம் செய்தார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

உங்கள்

## கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

## பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

## செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

**"Sri" Works**

Beadon St. Calcutta.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலியன முதிர்ந்தவர்களிடத்தில் காண்டலரிதே. நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டிய நற்குணங்கள் நம் இளைஞர்கள் பால் பொதிந்துள்ளன. என்னைப்போல வயதடைந்தவர்கள் உங்களுடைய உணர்ச்சி அதிகமாக பல வழிகளைக் காட்டலாமே ஒழிய, அழியாத உணர்ச்சியுடன் செயல் முறையில் நடத்திக்காட்டும் விசேட சக்தி உங்களிடமே உள்ளது.

"இந்த சக்தியை நீங்கள் எம்முறையிற் பயன்பெறச் செய்வீர்கள் உங்கள் முன்னோர்கள் சென்ற வழியைக்காட்டிலும் நீங்கள் சற்று விகஸித்த வழியில் செல்லவேண்டியவர்களாயிருக்கிறீர்கள். தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் முற்றிலும் அரசியற் காரியங்களை மேற்கொண்டு செய்யும். சமூக விஷயங்கள், பொருளாதார முன்னேற்றங்கள் இவைகளை, வாலிபர் சங்கம் மேற்கொள்ளவேண்டும்.

கடந்த பன்னிரண்டு வருடங்களாய் நம் கட்சி செய்த வேலைகளைப் பற்றி இந்தியா மட்டும் திருப்தி கொள்ளவில்லை; இங்கிலாந்திலுள்ளவர்களும் சிலாகித்துப் பேசியிருக்கின்றனர். மாண்டேகு சீர்திருத்தத்தின் படி நம்முடன் ஒத்துழைப்பதற்கு சென்னையிலுள்ள ஜஸ்டிஸ் கட்சியே போதிய ஆதரவளிக்குமென்று பாராளுமன்றத்தில் பலர் பேசியிருக்கின்றனர்.

"காங்கிரஸ் நிலையற்ற கொள்கைகளுடையதாய் ஆரம்பத்திலிருந்து நடந்து வருகிறது. அடிக்கடி சற்றும் பொறுப்பின்றி காங்கிரஸ், பல இயக்கங்களைத் தோற்றுவித்தும், நீக்கியும், குழப்பியும் வருகிறது. பல முறைகளை அவர்கள் கையாண்டும் ஏதோ வரையில்வெற்றிபெறவில்லை.

ஆலயப்பிரவேசம் வேண்டுமா? அல்லவா? என்ற வினாக்களைப்பற்றி நமது "ஜஸ்டிஸ்" "திராவிடன்" பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். நான் இதைப்பற்றி மாறான கருத்தளிப்பதற்கு என் மீது தப்பபிப்பிராயம்கொள்ளமாட்டீர்களென நினைக்கின்றேன். ஆங்காங்கு நடக்கின்றசட்ட மறுப்புகளை எதிர்க்கின்றோம். காங்கிரஸ் கொள்கைகளை வன்மையாய்க் கண்டிக்கிறோம். இங்ஙனம் செய்து சர்க்காரை ஆதரிக்கின்ற நாம் தற்சமயம் இவ்வியக்கத்தை நிறுத்திவைக்க வேண்டும். ஏற்கனவே சட்டமறுப்பால், பகிஷ்காரத்தொல்லையால், பல கஷ்டங்கள் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்குமிச்சமயத்தில் நாம், இந்த ஆலயப்பிரவேசத்தை ஆரம்பித்தால் சர்க்காருக்கு அதிக தொந்தரவுகள் அளித்ததாகும். நாட்டில், சட்ட மறுப்போ, குழப்பமோ, பகிஷ்காரமோ இல்லாதிருப்பின், அப்பொழுது நீங்கள் இப்பிரவேசஉரிமைக்குப்போராடினால் நானும் உங்களுடன் சந்தோஷமாக வேலை செய்வேன். இன்னம் பலாத்காரமாக பிரவேசித்தால் தற்கால அமைதிக்குப் பங்கம் நேரிடும். நாட்டின் அமைதியை உத்தேசித்தும் சர்க்காரின் தொந்திரவை உத்தேசித்தும் நீங்கள் தற்சமயம் ஆலயப்பிரவேச இயக்கத்தைநிறுத்தி வைக்குமாறும் வேண்டுகிறேன்.

நான் ஆரம்பத்தில் சட்ட மறுப்பை எதிர்க்கின்றவர்களென்றும், காங்கிரசின் எதிரிகளென்றும் நம்மைச் சொல்லியுள்ளேன். சட்ட மறுப்புப் பேய்கள் தான் நமது நாட்டைப்பிடித்து ஆட்டுகிறது. சாத்வீக தன்மை என காங்கிரசார் சொல்லுகிறார்களே ஒழிய நாட்டில் நடக்கும் பல பயங்கரப் புரட்சிகளுக்கும், கொலைகளுக்கும் காரணம் காங்கிரஸ்தான் என்று சொல்லுவதால் குற்றமில்லை. அநேக சர்க்கார் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். இந்த முறையற்ற செயல்களால் சுயராஜ்யம் வந்து விடுமென்று கருதுகிறார்களா? இந்த ஒன்றிரண்டு கொலைகளால் ஆங்கிலேயர்கள் பயந்துவிடுவார்களா? ஐரோப்பா யுத்தத்தில் கோடிக்கணக்கான பிரிட்டிஷாரை அர்ப்பணம் செய்யவில்லையா? ஆகையால் இத்தகைய கொடிய இயக்கங்களுக்குச் சற்றும் நாம் ஆதரவளிக்கப்படாது.

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் அதை ஏன் நெருப்பிலிட்டுப் பொசுக்கக் கூடாது?

கடைசியாக, நாம் ஒன்று கூறி நமது கட்டுரையை முடிக்கின்றோம். பெண் மக்களை, கற்பு, என்ற மற்றொரு கொடுமை நம் நாட்டிலிருந்து வதைக்கிறது. கற்பென்பதற்கு நாம் இங்கு கொள்ளும் அர்த்தமென்ன வெனில் பெண் சமூகத்தை அடிமைப் படுத்தி அவர்கள் பகுத்தறிவை பறிமுதல் செய்து கொள்ள வேண்டி ஆண் மக்களால் காட்டப்படும் ஒரு பூச்சாண்டியாகும். ஆனாலிதிலிருந்து நாம் பெண்மக்களை ஒழுங்கீனமான வழிகளில் ஆதரிப்பதாகவாவது, அல்லது அவ்வழியில் நடக்குமாறு தூண்டுவதாகவாவது கருதுவார்களானால் அவர்கள் நமது கருத்தை உள்ளது உள்ளபடி உணராதவராவார்கள்.

ஒத்தவயதில் ஒத்தகுணமும், ஒத்த நலனும் கூடி ஒருவருக்கொருவர் காதலால் யிழுக்கப்பட்டு மணம் செய்துகொண்டு வாழ்க்கை நடாத்தும் இருகாதலர்கள் தங்கள் கற்பை தாங்களே காத்துக்கொள்ளுவார்கள் அவர்களுக்கு பயமுறுத்தலோ பூச்சாண்டியோ தேவையில்லை.

சாஸ்திர பயமுறுத்தல்களாலோ ஆடவரின் காவலினலோ, பலவந்தமாகக் கற்பை காத்துக்கொள்ளும் பெண்மணிகள் கற்பை இழக்கவேண்டிய சந்தர்ப்பம் நேரிடில் தங்கள் கற்பை இழந்தே விடுகிறார்கள். பெண்மக்களை ஒழுங்கான வழிகளில் நடத்துவதாக ஆத்திகர்கள் நினைத்துக்கொண்டிருக்கும் மதமும், அடிமைத்தன்மையுமே அவர்களை மேன்மேலும் துன்மார்க்கமான வழிகளில் செலுத்துகின்றனவேயொழிய அவர்களுக்கு மெய்ஞ்ஞான அறிவை விளக்கி ஒழுங்கான வழிகளில் நடக்குமாறு செய்வதில்லை. சமயம் நேர்ந்திடில் கற்பு என்பதைக்குறித்து பின்னும் விளக்குவாம். ஆதலால் சகோதரர்களே! பெண்சமூகத்திற்கென உழைக்க முன்வாருங்கள்! அதற்கு விரோதமாக நிற்கும் மதமோ சாஸ்திரமோ பழக்கவழக்கமோ எதுவானாலும் அவற்றை பொசுக்கிவிடுங்கள், சுயமரியாதைவீரர்களே!

ஆங்காங்கே காதல் மணமும், விதவைமணமும் சுயமரியாதை முறையில் நடாத்தி பாமரமக்களுக்கு வழி காட்டுங்கள்? இதற்கு குறுக்கே நிற்கும் மதத்தலைவர்களோ, கடவுள்களோ, குட்டிச்சாமிகளோ, அரசாங்கமோ, எதுவாயினும் அவற்றை தீரமுடன் எதிர்த்து போராடி வெற்றி பெறுங்கள். இதுவே நமது நாட்டிற்கு வேண்டிய முதல் சீர்திருத்தமாகும். இதை விட்டு உப்புகாய்ச்சும் சுதந்தரத்திற்கும், துணி சுதந்தரத்திற்கும் அரசாங்கத்தாரிடம் போராடி தடியடியும், சிறைவாசமும் அனுபவிக்காதீர்கள், நமக்குள் அரசாங்கத்தின் சம்மதியின்மேல் செய்து கொள்ளவேண்டிய சீர்திருத்தங்களனேகமிருக்க உப்பு காய்ச்சும் சுதந்திரத்திற்கும் விதேசிசாமான் பகிஷ்காரத்திற்கும் சென்று அதனால் துன்பப்படாதீர்கள்.

ஜர்மனியிலிருந்து வரவழைத்த மூக்குக்கண்ணாடியும், அமெரிக்காவிலிருந்து வரவழைத்த உயர்தர ஜோடுகளையுமணிந்துகொண்டும், இங்கிலாந்தில் செய்யப்பட்ட தங்க கைக்கடியாரமும் அணிந்துகொண்டு "விதேசிசாமான்களைப் பகிஷ்கரியுங்கள்! அவைகளினலே நமது நாட்டில் வறுமை தோன்றி வதைக்கிற" தென்று கூச்சலிடும் தலைவர்களை நம்பாதீர்கள் என்பதே எனது வேண்டுகோளாகும்.

---

## சிலாங்கூர் ஆதிதிராவிட சங்கம்.

சிலாங்கூர் ஆதிதிராவிட சங்கத்தின் பொதுக்கூட்டம் 10-4-32ல் கோலாலம்பூர் டவுன் ஹாலில் 2-மணிக்கு திரு. பெரியையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் திரு G. குருசாமி அவர்கள் "சமதாநிலைமை" என்னும் விஷயமாக எல்லோருக்கும் விளங்கத்தக்க முறையில் மிகத்தெளிவாகப்பேசியதுடன் ராவ்பகதூர் M. C. ராஜா அவர்கள் கூட்டுத்தொகுதி கேட்பதைக் கண்டித்துப் பேசினர். பின் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேறியபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## துருக்கியில் கட்டாய விவாகச் சட்டம்.

சுலைமான் லரிபேக் என்பவர் துருகிப் பார்லிமெண்டில் ஒரு மசோதாக் கொண்டுவந்துள்ளார். கலியாணமாகாதவர் மீது கடுமையான வரிவிதிக்கவேண்டுமென்றும் எனெனில் அவர்கள் விவாகம் செய்யாதிருப்பதானது துருக்கி வாசிகளின் எதிர்கால ஜனத்தொகையபிவிருத்திக்கு பெருந்தடையாக இருக்கிறதென்றும்அதில் முகாந்தரம் கூறப்பட்டிருக்கிறது. சுலைமான் பேக் மிக்க உருக்கமாகப் பேசிய பின்னர் மேற் சொல்லிய சட்டத்தை சீக்கிரம் பிறப்பிக்குமாறு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டார். அத்தகைய சட்டம் ஏற்படாவிடில் துருக்கி சமுகம் என்பதே உலகத்தினின்றும் அற்றுப்போய் விடுமென்பதாகவும் சென்ற 600 வருஷ காலமாய்தொடர்ந்தாற்போல் நீடித்து வந்த யுத்தச் சேதங்களே தம் சமூகத்தினரின் குறைவுக்குக் காரண என்பதாயும் நிலைமை இப்படியே இருந்துவரின் இன்னும் இருநூறு வருஷ காலத்திற்குள் உலகின் கண் துருக்கியர் என்ற நாமதேயமே தென்படாதென்றும் கலியாணம் செய்து கொள்ளக்கூடியவர்களின் எண்ணிக்கை வரவரக்குறைந்து செல்லுகிறதென்றும் கலியாணம் செய்து கொள்ளாதவர்களையோ அல்லது கலியாணமான பின்னரும் சந்ததியாவதற்கு இடையூறாக வேலை செய்பவர்களையோ சமூதாய பறிமுதல் காரர்களென்று பாவித்துஅவர்களுக்குத்தூக்குத்தண்டனை விதிக்க வேண்டுமென்றும் விவரித்தார். துருக்கி பார்லிமெண்டில் பெரும்பாலார் அந்த மசோதாவுக்கு ஆதரவளித்தனர். துருக்கி கவர்ன்மெண்டார் இப்பிரச்சினையை ஒரு பிரச்சினையை ஒரு கமிட்டியின் வசம் ஒப்படைத்திருக்கிறார்கள். ஆனால் அக்கமிட்டியின் தலைவரான அப்துல்லா அபந்தி என்பவருக்கே வயோதிகப்பிராயம் எட்டி விட்டதாயினும் இதுகாறும் விவாகம் ஆகாதிருப்பது ஒரு வேடிக்கையே. (சு—மி)

---

## "செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "கரமத்எண்ணேயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons
Pilibhit R. K. Ry., U. P.

# சுயமரியாதைக்கு ஜே! வாழ்க தம்பதிகள்.

(திருமதி எஸ். நீலாவதி)

பெண் மக்கள் தம் பெரு வாழ்வைப் பறி முதல் செய்யும் வைதீகமே! சின்னஞ்சிறுபாலகிகளைச் சித்திரவதை செய்து சீரழியச்செய்யும் வைதவ்யமே! மாண்டாயோ? தங்கவயலில் பெண்மக்கட்குக்கல்வி புகட்டக் கூடாதென்னும் நினது கொள்கை இதுபற்றியேயன்றோ? ஆம் பெண்மணிகளான கண்மணிகள் கண்விழித்துவிட்டால் நினது வாழ்க்கைக்கு வெகுவிரைவில் அந்தியகாலம் கிட்டிவிடுமென்பதில் ஐயமின்றாம். தீண்டாமைப்பேயே! செத்துமடிந்தாயோ செல்வர் இரத்தினசபாபதியாரால் நினது கொடுமை எங்கே? நினது வஞ்சகம் எங்கே? நினது ஆணவம் எங்கே? யாவும் எம் உழுவலன்பர் இளைஞரேறிடத்து பரிதிவாய்ப்பட்ட பனிபோல் ஆயினவே!

வாழ்க அன்னபூரணி!

விதவைத்தன்மையை வெட்டி வீழ்த்திய வீரமணியே! நீடுவாழ்க! சாத்திரம் கோஷ்டம் காட்டி சண்டப்பிரசண்டம் செய்யும் சாத்திரிமார்கள் காலச்சக்கரத்தின் வேகத்தை உணர்ந்து குறிப்பாக பெண்மக்களின் சுதந்தர வேட்கையைக்கண்டு தமது குரங்குப்பிடியை, குரோத புத்தியைகைவிடுவார்களாக! நிற்க நம்நாட்டில் பெண்ணுலகம் மிக பிற்போக்கிலும் அறியாமையிலும ஆழ்ந்துகிடக்கையில் அப்பெண்களுக்கு அறிவுக்கண்களைத்திறக்கும் முறையிலும் வழிகாட்டிமுறையிலும் அநியாய ஆதிக்கம்மிகுந்த அக்கிரமமான கட்டுப்பாட்டை உடைத்தெறிந்து அன்புமணம் புரிந்து விதவைத்தன்மையையும், வேற்றுமைவிருட்சமான சாதி பேதத்தையும் வெட்டிவீழ்த்திய வீரமணி திரு. அன்னபூரணி அவர்களை பெண்கள்சார்பாகவும், சுயமரியாதை இயக்க சார்பாகவும் மனமகிழ்வோடு பாராட்டுகின்றேன்.

ஆ; நம் நாட்டில் விதவைப்பேயும் தீண்டாமை செய்யும் கொடுமைகள் கொஞ்சமோ? இவ்விரண்டும் ஏககாலத்தில் மாள்வதென்னில் எவ்வளவு தூரம் மகிழ்ச்சியடையத்தக்கது! வீணைசட்டத்திற்கு, வீணர்களின் சட்டத்திற்கு மாளாகிமடியும் விதவைச்சகோதரிகளே! நம் வீரதிலகத்தைப்பின்பற்றி விரைவில் முன்வந்து வெற்றியடைவீர்களாக) அறிவால் ஆய்ந்து அன்னபூரணியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுங்களென மீண்டும் வலியுறுத்திக்கூறுகின்றேன்

நமது பெண்ணுலக முன்னேற்றம் நமது உழைப்பிலும், நமது உறுதியிலும், வீரத்திலுமே அடங்கியிருக்கின்றது, யாதுதான் சட்டங்கள் வரினும் நமக்கு மனத்துணிவு ஒன்றில்லையேல் நாம் நிச்சயமாய் வெற்றியடையப்போவதில்லை. நமக்கு விடுதலையும் இக்காலத்தில்கிட்டாது. கருணையற்ற கடவுளின் பெயராலும் சாரமற்ற சட்டங்களின் பெயராலும் கொடுமை நிறைந்த சாத்திரங்களின் பெயராலும், சுயநல சூழ்ச்சிக்காரர்கள் பெண்மக்களை வதை செய்து வருவது எண்டெழுதிமுடியாது. அருமைச்சகோதரிகளே! அப்பேர்க்கொத்த கன்னெஞ்சக் கயவர்களுக்கு அறிவுச்சுடர் கொழுத்தவேண்டியது யார் கடமை? நமது கடமையன்றோ? ஆம்! அதில் அணுவளவும் ஐயமின்று.

மற்றும் மணமகளான திரு. அன்னபூரணி அவர்களைப்பற்றி அதிகம் சொல்ல ஆசிக்கவில்லையானாலும் ஒன்றிரண்டு வார்த்தைகள் கூறுகின்றேன். பெண்ணுலக முன்னேற்றத்திற்குப்பெரும் தொண்டுபுரிந்து, அகந்தைகொண்ட ஆணுலகிற்கு சரியான சவுக்கடி கொடுத்து சமத்துவத்தை நிலைநாட்டப்போராடுவதை 'தமிழன்' பத்திரிகை நேயர்கள் நன்கு அறிவார்கள். எழுத்தோடு நில்லாது செயலிலும் காட்டி வேற்றுமைத்தளைகளை வெட்டியெறிந்து அறியாமைமிகுந்த ஆண்களுக்கு அறிவுச்சுடர் கொளுத்தி பெண்ணுலகிற்கு வழிகாட்டிய சோதரி அன்னபூரணி அவர்கள் நீடூழிவாழ மனமார விரும்புகின்றேன்.

நிற்க நம் நாட்டில் பெண்களின் நிலைமை கேவலமாவது பெற்றோர்களாலேயே? தாம் ஈன்ற இரு சேய்களில் ஒன்றைப்புஷ்பமாகவும், மற்றொன்றைப்புல்லாகவும்மதித்து நடந்தால் சீரடைவது எது? என்பதை சிறிது யோசித்துப்பார்க்குங்காலையில்தான் மேலே செப்பிய தன் உண்மைவிளங்கும். பெண்கள் தற்காலமிருக்கும் நிலைமையில் ஆதரவின்றி எக்காரியமும் செய்யவியலாது. எனவே அவர்களது உரிமைகளுக்கு ஆதரவளிக்கப்பெற்றோர்கள் கடமைப்பட்டிருக்கின்றார்கள். இக்கடமையை நமதன்பர் திரு. ஜி. அப்பாதுரையார் அவர்கள் நிறைவேற்றிவிட்டதுபற்றி அகமகிழ்வதோடு அன்னாருக்கும் எனது வாழ்த்து, எனது வந்தனம் உரியதாகுக! இதரபெற்றோர்களும் இக்கடமையை உணர்வார்களாக!

## தீண்டாமையும், திரு. ரத்தினசபாபதியாரும்.

அன்பிற் சிறந்த நண்பர்களே! இனி மணமகனைப்பற்றி சிலவார்த்தைகள் கூறி இக்கட்டுரையை முடிக்கின்றேன். வைதீகக்கூட்டத்தில் சைவக்கூட்டம் முதன்மைபெற்றது, அதிலும் திருநெல்வேலி சைவர்களோ வென்றால் சொல்லவேண்டியதில்லை. திருநெல்வேலி சைவர்கள் சீர்திருத்தம்பெற செல்லும் காலம் எக்காலமோவென பலர் ஏங்கியதுண்டு. அப்பேர்க்கொத்த வகுப்பில் உதித்து, கொடிய தீண்டாமையின் ஆணிவேரைக்கல்லியெறிந்த நமதன்பர் திரு. இரத்தினசபாபதி அவர்களின் தீவிர உள்ளத்தைப்பற்றி சீர்திருத்த உலகம் அடையும் மகிழ்ச்சிக்கோர் அளவுமுண்டோ? 'சீர்திருத்த நெறிபற்றி சுயமரியாதை இயக்க ஆதரவில் நடைபெற்ற, நடைபெறும் பல கலப்பு காதல் மணங்களிலெல்லாம் இது ஒரு தனிமாண்பு கொண்டதை மட்டும் இங்கு குறிப்பிடவிரும்புகிறோம்.' என்று நமது குடிஅரசு ஆசிரியர் இம்மணத்தைப்பற்றி பாராட்டுக்காலையில் கூறியுள்ளார். இது மிகமிகப்பொருத்தமென்றே யானும் அறைகின்றேன். நம் தென்னாட்டைப்பொருத்தமட்டில் மணமகனின் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்பும் மணமகளின் வகுப்புக்கு கீழ்ப்பட்ட வகுப்பும் இருக்கமுடியாது. (வைதீகர்களின் கூற்றுப்படி கூறப்பட்டது நமக்கு வகுப்பென்பதொன்றுகிடையாது மக்கள் யாவரும் ஓரினமே) ஆதலால் இம்மணம் அளவிடற்கரிய சிறப்புடைத்தேயாகும்.

மேலும் மணமகளின், திறனையும் அறிவாற்றலையும் சிறிதுகூறப்படுவதானால் அவர்களால் இயற்றப்பட்ட 'பாகீரதி' யைவாங்கி வாசித்தறிய வேண்டிய தொன்றென்பதைத்தவிர வேறு ஒன்றும் என்னால் இயம்ப முடியவில்லை. சாதிக்கொடுமையும், மதத்திமிரும், சமய ஆணவமும் அழிந்தொழிவது இத்தகைய மணங்களாலேயே யென்பதை சகோதர வாலிப சிங்கங்கள் உணருமாறு வேண்டுகிறேன். நமது சமூகம் இன்றிருக்கும் நிலைமையில் தனது மாசைப் போக்க இத்தகைய வீரர்களையே, அஞ்சாநெஞ்சம்படைத்த இளைஞரேறுகளை எதிர்பார்க்கின்றது. உண்மை உணர்ச்சியும் உறுதியும்கொண்டு கைம்மைத்துன்பம்களைந்த சோதரர் இரத்தினசபாபதி அவர்களைம் பெரிதும் பாராட்டுகிறேன். எமதன்பிற்குரிய, காதல் கலப்பு மணத்தம்பதிகளான அன்னபூரணி ரத்தினசபாபதி அவர்கள் நீடூழிவாழ்ந்து ஈ. வெ. இராமனது இயக்கம் எண்டிசையெல்லாம் பரவ தொண்டாற்றுவார்களாக! கலப்பு மணமே வாழ்க! தீண்டாமையே மாழ்க!

---

## பார்ப்பனீய மொழிந்த 16ம் நாள் இறுதிச் சடங்கு.

செங்கல்பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலூகா ஜமீன் செய்யூர் பஜனை மடத் தெருவில் வசிக்கும் வி. ஜெயராம் என்பவர் தன் இல்லக்கிழத்தியார் மரண மடைந்ததை முன்னிட்டு 4—5—32-ல் நடத்த வேண்டிய இறுதிச் சடங்கை எவ்வித மூடச் சடங்குமின்றி தன் இல்லத்திலேயே சுற்றத்தார் முன்னிலையில் அவர் சக்திக் கேற்றவாறு இரண்டு ஏழைகளுக்கு வேஷ்டியும், ஒரு சுமங்கிலிக்கு புடவையும் தானம் கொடுத்து பந்து மித்திரர்களுடனும், ஏழைகளுடனும் போஜனம் செய்து இனிது நிறைவேற்றினரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---


ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Increase RETAINTIVE POWER and insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 40 Pills Rs. 5 only. Sample Phial of 20 Pills Rs 3 only.

Please write in English To:
*SAILASRAM (K)*
*Chandanpur (Khulna)*
*E. B. R.*



"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—8—0.

ஆசிரியர்: --
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.



சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலுபி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம்,தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வுண்மையை அறிந்தவராகும் முஸ்தபா கமால்பாஷா வென்னும் துருக்கிய வீரர் தம் நாட்டிலுள்ள பெண்களின் அடிமைத் தனத்தையும் படுதா முறையையும் நீக்கிச் சமத்துவ உரிமையும் சட்ட மூலமான பாதுகாப்பும் ஏற்படுத்தி யுள்ளமையால் அத்துருக்கிய நாடு வன்மை மிகுந்த வல்லரசாய் திகழ்ந்து வருவதை யார் மறுக்கக் கூடும்? அங்ஙனம் நமது நாட்டு மாதர்களுக்குச் சமத்துவந் தந்து சமூகச் சீர்திருத்தம் செய்யப் போகின்றீர்களா? அன்றேல் காங்கிரசுக்கும், கதருக்கும் 'ஜே' போட்டுக்கொண்டு காலந்தள்ளப் போகின்றீர்களாவென்று கேட்கின்றேன்? பெண்களுக்குச் சமத்துவமான உரிமை வழங்கவேண்டியதின் அவசியத்தையும், அதனால் அடையப்பெறும் முன்னேற்றத்தையும் நம்மனோரிற் சிலர் இன்னும் அறியாதவர்களாய் எதிர் பிரசாரம் செய்து வருவது வருந்தத்தக்கதொன்றாம். உதாரணமாக இவ்வுலகிலுள்ள பல நாட்டார்களும் பரிசு பெறும்படி ஒரு பந்தய ஓட்டம் ஓடுவதாக வைத்துக்கொள்வோம்; அவ்வோட்டத்தில்ஒவ்வொரு நாட்டிலும் வாழும் ஆண்கள் ஒரு காலாகவும், பெண்கள் ஒரு காலாகவும் சேர்ந்து ஆக இரண்டு கால்களாலேயே அப்பந்தயத்தில் ஓடவேண்டியதாயிருக்கின்றது. ஆதலின் ஆண்களைப் போலவே பெண்களுக்குக் கல்விப் பயிற்சி முதலிய சமத்துவ உரிமைகளை வழங்கி அவர்களால் அடையக்கூடிய பலன்களை யெல்லாம் அநுபவித்து வரும் நாட்டார் இரண்டு கால்களாலும் ஓடுகிறவர்களாவார்கள். அங்ஙனம் செய்யாமல் பிள்ளை பெறும் இயந்திரங்களாகவும் சமையல் செய்யும் அடுக்களையாகவும் பெண்களைக் கருதி அடிமைகளாக நடத்தி அவர்களால் அடையக்கூடிய நன்மைகளை அடையாமல் வாழ்ந்து வரும் இந்திய நாட்டார், ஒரு காலை மடக்கிக்கொண்டு ஒரு காலால் நொண்டியடித்து ஓட முயலும் மூடருக்குச் சமானமாய் இருக்கிறார்களென்பது பிழையாகுமா?

இவ்வுண்மையை யுணர்ந்து கொள்ளும் காலமே நமது விடுதலைக்குரிய கால மென்பதில் என்ன சந்தேகம்? பொய்யில் புலவரென்று போற்றப்படும் திருவள்ளுவருங்கூட கற்பையும், கணவரைப்பேணும் சிரத்தையையும், வீட்டு வேலைகளின் திறமையுமாகிய குணங்களையே வியந்து,

அடிசிற்கினியாளே அன்புடையாளே
படிசொல் தவறாத பாவாய் அடிவருடிப்
பின் தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என் தூங்கும் எங்கண் இரா?

என்று தன் சுக சௌகரியங்களைப்பெரிதாய்ப் பாராட்டிக் கூறியதாகக் காணக்கிடக்கின்றதே? இம்மட்டோ! பெண்களாய் பிறந்தோரும்,பெண்களைப்பெற்றோரும் நமது இந்து சமூகத்தில் படும் பாடு, அம்மம்ம! அளவிடுதற் கரியனவாம் "ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" என்னும் பழமொழியுடன், ஐந்து ஆண்களைப் பெற்றுவிட்டால் ஆண்டியும் அரசனாவான் என்னும் பழமொழியும் இந்நாளிலே வழங்கி வருவதை யறியாதார் யார்? குதிரை தூக்கிப்போட்டதுமன்றி குழியையும் பறிப்பது போல் ஒருவன் பெண்ணைப்பெற்றுக் கண்மணிபோல் வளர்த்து, இரவு பகல் நித்திரையின்றி அதே கவலையாய்த் தேடித்திரிந்து பற்காட்டிக் கெஞ்சி மனதுக்கிசைந்தவனோ, இசையாதவனோ, ஒருவனையும் சம்பாதித்துத் தனது மாசு மறுவற்ற மல்லிகை மலர் போன்ற கன்னிகையைச் சர்வாலங்கிருத பூஷணியாய், அநேக சீர்களுடன், 'அப்பனே' அடித்தாலும் அணைத்தாலும் நீயே இவர்களுக்குக் கதி, இன்னும் பல ஸ்திரீகளிடம் சென்றாலும், வேறு கலியாணங்கள் செய்து கொண்டாலும் நீயே இவளுக்குத் துணை, உனக்கும் உன் தாய் தந்தையருக்கும் உடன் பிறந்தாருக்கும் இவள் அடிமை; நீ எப்பாடு படுத்தினாலும் இவள் இனி உன்னுடைய சொத்து என்று தாரை வார்த்துக்கலியாணம் செய்து கொடுக்கும் கொடுமை நூற்றுக்கணக்காக நமது கண்முன் நிகழ்வதை யார் மறுக்கக்கூடும்? இவ்விதக்கொடுமைகளுக்கெல்லாம் பால்யமணமென்னும் வைதீகமே காரணமாயிருக்கின்றதென்பதை இல்லையென்று யார் விரல் விட்டுச் சொல்லக்கூடும்?

இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின் முதலான தேசங்களில் 30 வயதுள்ள ஆண்களைச் சிறுவர்களென்றும், 25 வயதுள்ள பெண்களைச் சிறுமிகளென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் நமது நாட்டிலோ, 13 வயதுள்ள இளம் பெண்ணைப் பெரிய மனுஷியாய் விட்டாளென்று பறைசாற்றி, 30 வயதுள்ள மாதர்களைக் கிழவியாய்விட்டாளென்று கூசாது கூறுகிறார்கள். இவ்வித இழிவுக்குக் காரணம் பால்ய மணமென்னும்குழந்தை மணமல்லவா? பெண்கள் கல்விமுன்னேற்றமடையாமைக்கும்,உடல்நலக் கேட்டுக்கும், சுயபுத்தியைஉபயோகிக்கக் கூடாமைக்கும் இந்த பால்ய மணமென்னும் கொள்ளை நோயே சத்துருவாயிருக்கிற தென்பது சத்தியமல்லவா? இன்னோரன்ன கொடுமைகளெல்லாம் நீங்கி மாதர் சமநிலையடைவதற்கு சாதிபேதமென்னும் சண்டிநோயும் தீண்டாமையென்னும் திருட்டு நோயும் விலகி நமது நாடு சுதந்திர மடைவதற்கும் மாதர் மகாநாடுகளும் சுயமரியாதை மகாநாடுகளும் நூற்றுக்கணக்காக ஆங்காங்கே கூடி மக்களுக்குள் பகுத்தறிவைப் பரவச் செய்யவேண்டும். இளைஞர்களும், அறிஞர்களும் சலியாதுழைத்து இவ்வியக்கங்களுக்குத் துணைபோகவேண்டுமென்று தயவாய் கேட்டுக்கொண்டுஇம்மாதர்மகாநாட்டைக்களிப்போடு திறந்து வைக்கிறேன்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கப்பதப்படுத்தலாம். பட்சி, பறவை, செடி, புல், மரம், எல்லா வஸ்துக்களின் உடல்களையும் பதப்படுத்தி, பல காலம் கெடாமல் வைத்திருக்கலாம். கோடி வருஷத்திற்குமுன் வாழ்ந்து இருந்த வண்டுகள், குங்கிலிய மரத்தில் பதப்பட்டு, யாதொரு உறுப்புகளும் கெடாமல் இன்றைக்கும் பார்க்கலாம். ஆனால் அந்தக்காலத்தில் "கடவுள்" என்ற பெயரையே உலகம் கேட்டறியா! யார் மகத்துவத்தால், அந்த வண்டுகள் 100 லட்சம் வருஷத்திற்கு முந்தி செத்தும், கெடாமலிருந்திருக்கின்றன?

சகலமும் அழிந்து போம் புழு, பூச்சி உடலானாலும் சரி, மகாத்மா உடலானாலும் சரியே. ஆனால் அந்த அழிவை சிற் சில சிகிச்சையால், சில காலம் தடை செய்யலாம். மரணம் என்பது (Death) இரண்டு வகைத்து. தேக உறுப்புகள் சாவு ஒன்று, தேக முழுமையும் சாவு மற்றொன்று. முதல் சாவை அனுதினமும், நிமிஷத்திற்கு நிமிஷம் பார்க்கலாம். நம்முடைய தோல் உடனுக்குடனே சாகின்றது. ஆனால் தேக முழுமையும் ஒரே காலத்தில் சாகின்றது. இதற்குக்குக்காரணமென்னவென்று தெரிதல் வேண்டும். ஒருவன் இறந்தான் என்றால், அவன் உயிர் போயிற்றென்றும், அவன் ஆன்மா நீங்கிற்றென்றும் சாமான்ய மனிதர் சொல்லுவார்கள். ஆனால் ஆன்மாவும் போனதுமில்லை உயிரும் போனதுமில்லை. எரிந்த நெருப்பு அவிந்தால், அதிலிருந்து நெருப்பின் ஆன்மாவாவது, உயிராவது போனதாகச் சொல்வதில்லை. ஆனால் மனிதன் இறந்தால் மாத்திரம் ஆன்மாவோ உயிரோ போயிற்று என்று பிதற்றுகிறார்கள். இது ஆதாரமற்ற பிதற்றலேயொழிய வேறில்லை. உயிர் போனதுமில்லை. உயிர் வந்ததுமில்லை. பிராணன் போயிற்றென்பதும், பிராணன் வந்ததென்பதும் உலக வழக்கு, வெறுஞ் சொல்லேயொழிய வேறில்லை. சூரியன் உதயமானான், சூரியன் அஸ்தமித்தான் என்ற உலக வழக்கச் சொற்போன்றதே, உண்மையல்ல. உயிர் என்றால் பிராணவாயுவின் சம்பந்தத்தால் சூடு எழுவதே உயிராகும். அதாவது, (Oxidation) உடலில் சூடுஉண்டாகும் வரை உயிர் என்று சொல்லவேண்டும். அது நின்றகாலை மரணமென்று கூறவேண்டும். இந்த உஷ்ணம் உண்டாகும் வரை உடல் சீவித்திருக்கும். அது நின்ற வேளை மரித்துப்போம். ஆனால் இந்த உஷ்ணம் உண்டாவதை சில காலம் நிகழவைக்கலாம். இந்த சுடுகை (Oxidation) நிகழும் வரை எந்தக்கிருமியும் நமது தேகத்தைக் கெடுக்க முடியாது. உஷ்ணம் நின்ற மாத்திரத்தில் விஷக்கிருமிகள், நமது உடலின் பாகங்களை எதிர்க்க ஆரம்பிக்கும். இந்த எதிர்ப்பால்தான் நமது தேகத்தில் நாற்றமும், அழிவும் நேரிடுகிறது. அக்காலை துர்நாற்றம் வீசும். சதை, துண்டு துண்டாக அற்றுப்போகும். அழுவும் பழம் போல் ஆகும். இது அதிகமாக நிகழாவண்ணம்தான் மரித்தவுடலை புதைத்து விடுகின்றோம். அல்லது எரித்து விடுகின்றோம். ஆனால் இந்தக்கேட்டை எப்படி தடுக்கலாமென்றால் இறந்த பிறகு நமது உடலைஎதிர்க்கும் கிருமிகளை,நெருங்கவொட்டாமல் செய்வதன்மூலமே தடுக்கலாம். மரித்துப்போன சிரேகத்தில் விஷக்கிருமிகள் (Microbes) அணுகாதபடி தகுந்த சிகிச்சையால் செய்தால், மரித்த தேகம் நாற்றமில்லாமலும், அழிவில்லாமலும் சில காலம் இருக்கலாம். இறந்த பிறகு பிரேதத்தை ரசாயனப்பொருள்களைக்கொண்டு, விஷக்கிருமிகள், தேகத்தைத் துளைக்காமல் இருக்கச் செய்வோமாகில், தேகம் வாடாமலும், வதங்காமலும்,இருக்கக்கூடும். இதுதான் பதப்படுத்துவதென்பது. எந்த உடலையும், எந்தப் பொருளையும் பதப்படுத்தலாம். பதப்படுத்திய கருவாடானாலும், துவையலானாலும், மீனானாலும் (Tinned Fish)மாம்சமானாலும்(Tinned Meat), திருடன், கொலைபாளி தேகமானாலும், அல்லது மகாத்மா உடலானாலும், எதையும் இறந்த பிறகு அழிவுறாமல் வைக்கலாம். இந்தக் காரியங்கள் யாவும் தெய்வத்தன்மையுமல்ல; தெய்வ காரியமுமல்ல; சாதாரண மனித காரியங்களே. பல மக்களிடத்தும் பரவியுள்ள இவ்வித மூட பக்தியைப்போக்கி தெளிவு பெறுவதற்கு சமயம் அளித்த நமது நந்தம்பாக்கம் நிருபருக்கு ஆசி கூறுகிறோம்.

---

## தேசீயப்பார்ப்பனரில் பூணூலை அறுத்தவர் எத்தனை பேர்?

Read the
"SUPERSTITION OF KHADI"
A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House,
Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.

## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

## திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்த விளக்கமும்

குறளைப்பற்றிப்பல பண்டிதர்களுக்கேற்பட்ட
சந்தேக நிவர்த்தி நூல்
திருக்குறளாசிரியர் திருவளுவரல்லர்.
பரிமேலழகர் உரை பல பொருந்ாதனவைகளே

இந்நூலின்கண் குறளாசிரியர்எலாச்சாரியாரென்னும் ஜைன மகாமுனிவர் என்பதையும் கடவுள் வாழ்த்து பத்தும் ஆதி பகவான் என்னும் அருகக்கடவுளின் தன்மையைச் சார்ந்தவைகளேயன்றி ஏனைய மதத்தினர் கூறும் கடவுள் தன்மைக்கு பொருந்ாதன வென்பதையும் நிரூபித்து, ஜைன சமய சித்தாந்தங்களையே நிறைத்துள்ளாரென்பதையும் விளக்கி தொல்காப்பியர், அகத்தியர், இறையனாரகப் பொருளாசிரியர் ஆகியவர்களும் ஜைனர்களேயென்றும் நடுநிலைமையோடு நூற்றுக்கணக்கான வடமொழி தென்மொழி மேற்கோள் நூல்களால் மிக்க விரிவாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன.
இப்புத்தகம் 500 பக்கங்களுள்ளது. இதன் விலை ரூ. 2—0—0

கிடைக்குமிடங்கள்:—
தி. அ. அனந்தநாத நயினர் & சன்ஸ்
பட்டு ஜவுளி வியாபாரம்,
ஆடிசன்பேட்டை, காஞ்சீபுரம்.
தி. ஆதிநயினர்,
21, பாரிஷ் வெங்கடாஜலய்யர் தெரு,
ஜி. டி. சென்னை.

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் செலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

## அச்சாபீஸ் மிஷின் விற்பனை.

நமது ஆபீசுக்கு பெரிய மிஷின்கள் வரவழைத்து விட்டபடியால் தற்காலம் நல்ல கண்டிஷனில் மிக சுத்தமாக வேலை செய்து கொண்டிருக்கும் அடியில்கண்ட மிஷின்களை விற்று விடப்படும்.

டபுள் கிரவுன் சிலிண்டர் மிஷின் 1,
டிம்மி சிலிண்டர் மிஷின் 1.

உபயோகப் படுத்தப்பட்டு நல்ல நிலைமையிலுள்ள இங்கிலீஷ், தமிழ் போஸ்டர் டைப்கள்; பல ரகங்கள்.
நேரில் வந்து பார்த்து முடித்துக்கொள்ளலாம். மானேஜர்.

**குமரன் பிரஸ் காஞ்சீபுரம்.**

## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930-ஆு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M, S பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

**தக்ளி ஊர்வலங்கள் எங்கே?**

**உப்புக்குவியல்கள் எங்கே?**

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும்,. பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.
இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.
இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமைய்யாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.
இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.